646

விக்ருதி ஹூ ஆடி மீ

ஸம்புடம் - 9
ஸஞ்சிகை - 7

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகேட்)

:ப்ரசுரிக்கு மிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,
சென்னை—7.

JL
Q22ஹ2145141
M50.9.7
189272

JULY 1950
Vol. 9 No. 7.

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	196
2.	தாயைப் பார்த்து மகளைக் கொள்ளு	200
3.	உபய வேதாந்த ஐககண்ட்யம்	204
4.	ஆசார்ய குணகீர்த்தநம்	207
5.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	210
6.	நற்போதுபோக்கு	211
7.	மதுராலாபம்	215
8.	செய்திகள்	219
9.	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்	224
10.	ஸம்பாதகரின் குறிப்புகள்	226

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விக்ருதி ஸூ ஆடி மீ	ஸஞ்சிகை 7

"அஹோபிலே கருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

189272

—————:o:—————

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

O2:2887:N1
N50

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

சென்னை 00 008

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9–ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

வ்யவஸாயன்—தேவனே! இந்தத் தசையிலும் அத்யாஸமா? 'அது வல்லாததில் அது எனும் புத்தி செய்வ' தென்ற அத்யாஸ ப்ரமத்திற்கு இனி இடமேது? இத்தத்வஜ்ஞாந ப்ரதிஷ்டையில் ப்ரதிஷ்டிதமான உண்மை யறிவு நிலையிது. இப்பொழுது இந்த நிலைக்கு வந்துள்ள உபாஸக ஜீவன், தன் ஶரீரத்தில் 'தான்' (அதாவது: தானாகிய ஜீவாத்ம ஸ்வரூபம்) என்னும் ப்ராந்தி புத்தியை (அத்யாஸ புத்தியை) முன்பு இருந்ததைத் தள்ளிவிட்டு, தானெனும் உயிரில் (ஸ்வாத்ம ஸ்வரூபத்தில்) பரமாத்மாவின் உடல் என்னும் புத்தியை அநுஸ்யூதமாய்ப் பயிற்சி செய்கிறான். இத்தனை நாளாகத் தன் உடலில் உயிர் புத்தி செய்வதை விட்டுப் பரமனுக்கு உடலாகத் தன்னையும் பரமனைத் தனக்கு உயிராகவும் அநுஸந்திக்கிறான். தன் ப்ராக்ருத உடலில் தான் என்னும் உயிர் புத்தி முன்பு செய்தது அத்யாஸம்—ப்ரமம். பரனென்னும் ஸர்வ உலக உயிருக்கு ஜீவ உயிராகிய தான் உடலே என்கிற புத்திதான் தத்வ புத்தி. 'உடலில் ஆத்ம புத்தியை விட்டு ஆத்மாவில் உடல் புத்தி செய்வது தத்வஜ்ஞாந நிலை' என்று வைசித்ர்ய ரஸம். 'யஸ்யாத்மா ஶரீரம்' என்ற அந்தர்யாம்யதிகரண ஸாராவளியும் இந்த வைசித்ர்ய ரஸத்தை ஸூசிப்பது. "அந்த அந்தர்யாமிக்கு (பூமி முதலிய ஜடப் பொருள்களைப்போல) ஜீவாத்மாவும் உடலெனப்படுகிறது. 'நஹிஜீவஸ்ய ஜீவ: ஶரீரம் ஹவிதும் அர்ஹதி' (ஜீவனுக்கு ஜீவன் உடலாகுமோ?) தன்னுயிரான மற்றோர் விச்வ உயிருக்குத்தான் அது உடலாகும். தனக்கே தான் உடலாகுமோ?" என்று பத யோஜனை காட்டிய ரஸம். 'யஸ்யாத்மா ஶரீரம்' என்ற விடத்தில் 'யஸ்ய' என்பதற்கு 'ஆத்மாவான தனக்கு' என்றும், 'ஆத்மா' என்பதற்கு 'ஆத்மாவான தான்' என்றும் பாமதி பொருள் கூறியபடி பொருள் கூறினால் 'தனக்கே தானுடல்' என்று சொல்வதாகத்தானே ஆகுமென்று ரஸ ப்ரதர்ஶநத்தில் பத யோஜநையின் கருத்து.

ராஜா—இத்தனை ச்ரமப்பட்டு இந்த்ரியாதிகளை ஒடுக்கியும், மனக்குரங்கு தன் சாபலத்வத்தை விட்டொடுங்கியும், பிறர் தன்னை அவமானப்படுத்தும்போது கிளம்பும் கோபாக்நியை ஶாந்தி ஜலத்தால் அணைத்தாலும் சாம்பலில் மறைந்திருக்கும் தணல்போல் திரும்பவும் கோபம் பற்றி எரிய ஆரம்பிக்கும். இது ஸமாதியைத் தடை செய்யுமே யென்று பயம். பிறருடைய அவமதிப்பையும் கடுஞ்சொற்களையும் பொறுப்பது கடினமாயிற்று. ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரத் தொடக்கத்தில், "இப்படி தனக்கு நிஷ்டை யுண்டென்று

தானறியும்படி யெங்ஙனே யென்னில்:—பிறராலே பரிபவாதிகள் வந்த போது" என்று தொடங்கி இது முக்யமாக எடுத்துக் காட்டப்பட்டது. இங்கே, 'ஏவம் தத்ர அந்யதேஹாந்தரேஷு விசேஷாம் அதிசய்ய' என்று கூறிய 'ஏவம்' எனும் இந்த விமர்ஶ ஸந்தி யங்கமும் இந்த அத்யாத்ம நாடகத்திற்கு இங்கே ரஸமாகச் சேருவதைக் கவனிக்கவேணும். "எழுங் கோபத்தால் ஸமாதி த்ரவிக்கும்; உடம்பும் த்ரவிக்கும். அவித்யா வாஸநைகளும் அடியோடு தொலைவது அரிதாயிருக்கிறது" என்று ஸ்ரீ அஹோபில ஸ்வாமியின் ப்ரபா விலாஸ உரை.

> ஸஹசரவிபவ: ப்ரத்யக்சித்தாப³ஹிர்விஷயாடவீ
> விஹ்ருதிபடுதாம் ஸந்தோஷோத்தை²: கத²ம் ப்ரஹவிஷ்யதி ।
> அநிப்⁴ருததடக்ரீடோத்கீர்ணாவிஜ்ரும்பி⁴தஸம்ஹநே
> கலப⁴வாரணே லூதாதந்துபி⁴: கத²ம் நியம்யதே ॥

'பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூ⁴:' என்ற கடவல்லீ மந்த்ரத்தில் காட்டியபடி இந்த்ரியங்கள் வெளியே செல்வனவாகவே அமைக்கப்பட் டுள்ளன. மநஸ்ஸும் அவற்றோடு கூடவே செல்லும். மநஸ்ஸை வெளியே போவதிலிருந்தது அடக்கி உள்ளேயே போய்க்கொண்டு அங்கே உள்ளே த்யேயமான ஸர்வாந்தரமான உள் பொருளிலே நிலைநிறுத்தவேணும்.

'ப்ரத்யக்' என்பது உள்ளே யிருக்கும் ஆத்மா. இரண்டு ஆத்மாத்மாக்களையும் அந்த ஶப்தம் சொல்லும். சுத்த ஸ்வாத்மாவும் விசேஷணமாக த்யாநத்தில் சேர்ந்ததே. அதுவும் ப்ராப்யமே.

ப³ஹிர்விஷயாடவீவிஹ்ருதிபடுத்வம்—வெளியே யுள்ள சிற்றின்ப விஷயக் காடுகளிலேயே ஸஹஜமாக அநாதி காலமாக விளையாடிக்கொண்டு, அதிலே சபலம் பிடித்த மனதை இப்பொழுது ஆரம்பித்திருக்கும் உள்ளே ப்ரத்யக்கினுள் செலுத்தி நிறுத்தும் ஸ்வல்ப நல்ல யோகாப்யாஸ வாஸநைகள் அநந்தமான அநாதி காலமாகப் படிந்துள்ள பஹிர் துர்வாஸநைகளை எப்படி அடக்கும் ?

அநிப்⁴ருத தடக்ரீடோத்கீர்ணாவிஜ்ரும்பி⁴தஸம்ஹநே கலப⁴வாரணே—ஓயாமல் மலைத்தடங்களில் தந்தங்களால் முட்டிக்கொண்டு வப்ரக்ரீடை விளையாடும் மும்முரத்தில் த்வரையுள்ள யுவ வயஸ்ஸு யானையின் காலில் சிலந்திப்பூச்சி கட்டின கூட்டின் நூலால் விலங்கு போட்டு அடக்கப் பார்ப்பது போலாகும். முதல் அங்கத்தில் 41-வது ச்லோகத்திலும் இது கூறப்பட்டது. அங்கே தன் பலத்தால் முடியாதென்று கூறப்பட்டது. இங்கே ஸ்வதந்த்ரனாகிய ஸர்வஶக்த பகவானுடைய அநுக்ரஹம் கைகொடுக்க, நாமும் உஷாராக நழுவாமல் ஜாகரூகனா யிருக்கவேண்டு மென்கிறான்.

ஸேனாபதியே ! இத்தனை ஸாதித்திருந்தும் ஸாத்ய ஶேஷத்தை விமர்ஶிக்கையில் இதுவரையில் செய்தது ஒன்றுமில்லை யென்று தோன்றுகிறது. [இங்கே இப்படி விமர்ஶ பதத்தையே விமர்ஶ ஸந்தியில் வைப்பது அழகு] இப்பொழுதோவெனில்,

" ஸவிதஉ-ஹூஜீவா நாம் காஸாதீநாம் வஹீயஸாம் ।
ஸவிட்யாகஉ-ஜஸம்ஜாத- ஶ்ருதஸஂஜீவிநீ ஸ்ழிதா ॥ "

காமம் முதலிய ப்ரபல ஶத்ருக்கள் உயிர் வாங்கப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தாலும், கர்மம் என்கிற பெயரையுடைய அவித்யை (அஜ்ஞானம்) மாண்ட அந்த ஶத்ருக்களை மறுபடியும் பிழைப்பிக்கும் ம்ருதஸஞ்ஜீவினியாக நிற்கிறது. பகவானுடைய தயை உயிர் போனதுபோல விருக்கும் ஜீவனை உயிர் தந்து பிழைப்பிக்கும் ம்ருத ஸஞ்ஜீவினீ. 'ஸவிட்யாகஉ-ஜஸம்ஜாநத்யா ஶ்ருதீயாஶக்தி ஷ்யதெ' என்று கூறப்பட்ட அவித்யை மடிந்த காமாதி ஶத்ருக்களைப் பிழைப்பூமூட்டுவ தென்று ரஸம். 'ஶ்ருதஸஂஜீவநஂஜநாதுயௌநொ:' அஞ்ஜந கிரியில் அஞ்ஜந மயமான திருவேங்கடமுடையான் திவ்ய திருமேனியை ம்ருதஸஞ்ஜீவநமாக அங்கே வர்ணித்தார்.

வ்யவஸாயர் :—

உஹதி நிரவஶேஷம் தெவஸஂஹ-உதிரெநாம்
யடிஶவதிஹஸமிஜோ யொகஸூரூணவஹி: ॥

யோகம், ஸமாதி யெனும் ப்ரளய காலாக்நி பலமாகக் கிளம்பி எரித்தால் அவித்யா ஶேஷமில்லை. அவித்யையை அது கொளுத்திச் சாம்ப லாக்கிவிடும். 'தெவஸஂஹ-உதி:' என்பதற்கு—'பரமாத்மாவின் க்ருபையால் உண்டானது இந்த யோகாக்நி' என்பது பொருள். ஏனெனில், இப்பொழுது இந்த ஸாதக ஜீவபுருஷன் அடைந்திருக்கும் ஸ்திதி என்னவென்றால்,

ஸகாரகாருகூடிம் தாணீகூணவம் ஸஹாஹஜஜீம் ௪ ।
வரிஹர தி ராஜயா நீ கஂவீவாகம் ௪ ஶவஶாஹாதீ: ॥

ஸத்காரம், பூஜை, பஹுமானம், ச்லாகை முதலியவற்றைக் காலகூட விஷம் போல் நினைத்து வெறுக்கிறார். இங்கே, ஶததூஷணியில் 65-ம் வாதத்தில் ஸ்வாமி உதாஹரித்த,

"ஸஂமாநாத்ஹணொ நித்யம் உஜிஜெத விஷாதிவ ।
ஸஶ்ருதஸ்யெவசாகாஂக்ஷெஉவஶாநஸ்ய ஸவஜா ॥ "

என்கிற மநு வசநத்தை நினைத்து ஸம்மாந மென்னும் ஸத்காரத்தைக் காலகூட விஷ மென்கிறார். க்யாதி லாப பூஜைகளில் துளி மனம் வைத்து அதைப் பெறுவதே விஷம். அந்த விஷத் துளியும் யோக ஸித்தியைக் கொல்லும். ஸ்வரூபம் பிழைக்க இத்தனை பாடுபட்டு வித்யையி லிறங்கியும், துளி பூஜையில் ஆசை வைத்து அதற் கிடங் கொடுத்தால் அது காலகூட விஷமே. அவமாநம் யார் செய்யப்போகிறார்க ளென்று அம்ருதத்தைப்போல் அதை விரும்பிக்

கொண்டிருக்கவேண்டும். 'ஸுஸம்ஸாராந்நாஸ்தி வைராக்³யம் ஸம்ஸாராந்நாஸ்தி வஶ்யதா' 'ஸஞ்சித: ஸஜ்ஜநோ விஷ்ணோ: ஶ்ரத்³தா⁴ மணிரிவ ஹ்ருதி' என்ற அழகிய வசநமும் அத்வைத க்ரந்தங்களில் இந்த ப்ரகரணங்களில் உதாஹரிக்கப்பட்டுள்ளது. 'தாருணீகுணபம்'—யுவதியைக் கண்டால் உயிரில்லாத ஶரீரத்தைக் கண்டால் எப்படி வெறுப்புடன் தூரச் செல்லுவரோ, கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாரோ, அப்படி வைராக்ய வெறுப்பிருக்கிறது. தேஹத்தில் ஆத்மபுத்தி செய்பவரை, 'குணபாத்மவாதி³ந:' என்று ப்ரஹ்லாதர் வெறுத்ததை நினைக்கிறார்.

"யோஷிதோ ஹரிவ மணாஹ்ருத: ஸம்ஸாரநாஶகாதி³வ।
குணபாதி³வ த்³ருஶ்யதே ஸைவ ப்³ராஹ்மணம் விது³:" ॥

என்று ஶததூஷணயில் உதாஹரிக்கப்பட்ட வசநத்தை இங்கே அநுஸரிப்பது திண்ணம்.

"பரிவ்ராட்காமுகஶுநாமேகஸ்யாம் ப்ரமதாதநௌ।
குணப: காமிநீ ப⁴க்ஷ்யமிதி திஸ்ரோ விகல்பநா: ॥"

என்ற ப்ராசீந ச்லோகம் வாசஸ்பதி முதலியோராலும், ஶததூஷணியில் யோகாசாரபங்க வாதத்திலும் உதாஹரிக்கப்பட்டதையும் நினைக்கிறார். 'ப்ரமதா' என்னும் (தருணீ) பெண்ணின் உடம்பை விரக்த ஸந்யாஸிகள் 'குணபம்' என்று வெறுப்பர். ஸ்வாமியின் வைராக்யம் ஸந்யாஸிகளுக்கும் மேற்பட்டது. 'ஸபா⁴ஸர்பராஜீம்து' ராஜ ஸபையை (ஸம்மாநத்திற் கேற்பட்ட ஸபையை) சீறும் பெண் பாம்பு இருக்கும் இடத்தில்கூட நெருங்காமல் நுழையாமல் எப்படி தூரத்தில் விலகுவரோ அப்படி ஒதுங்கவேணும். பாம்புகள் இருக்கும் பிலம் போல் நினைத்து ஸபையில் நுழையவே கூடாது. 'பரிஹரதி' இது எல்லாவற்றோடும் ஒட்டுவது. 'ராஜதா⁴நீகும்பீ⁴பாகம்'—ராஜதாநீ என்பதை கும்பீபாகம் என்னும் நரகம்போல் நினைத்து அதில் நுழையவே கூடாது. இவரை ராஜதாநிக்கும் ஸபைக்கும் அழைத்து ஸம்மானிக்கவேணு மென்று ராஜாவினுடையவும், இவர் ஸுஹ்ருத்தான ராஜ பூஜிதரான வித்யாரண்ய முனியினுடையவும் ப்ரணயாஹ்வாநத்தையும் அங்கீகரிக்க மன மில்லாமல் வைராக்ய பஞ்சக மெனும் ஐந்து ச்லோகங்களை அனுப்பிவித்தது ப்ரஸித்தம். கண்வ ஶிஷ்யரான சார்ங்கரவமிச்ரர் ப்ரதிஷ்டாந மென்னும் ராஜதாநிக்குள் புகுந்ததும் 'இத³ம் ஶஶ்வத்பரிசிதவிவிக்தேந மநஸா ஜநாகீர்ணம் மந்யே ஹுதவஹபரீதம் க்³ருஹமிவ' என்று வெறுப்பை யுரைத்தார். இங்கே கும்பீபாக நரகாக்நிகளுக்கு உபமாநம், 'விவிக்ததே³ஶஸேவித்வம் அரதிர்ஜநஸம்ஸதி³' என்று கீதாசார்யன் காட்டிய அநுபவப் பயிற்சியின் பயன். [சென்னை யெனும் ராஜதாநி பட்டணத்தில் பாக்கங்க ளுண்டு. இந்த ச்லோகத்தில் கும்பீபாக ஶப்தத்தால் ராஜதாநியைச் சேர்ந்த பாக்கங்கள் கும்பீபாகம் போன்றவை யென்று வ்யஞ்ஜந ரஸம்.]

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

‘தாயைப் பார்த்து மகளைக் கொள்ளு’

[ஸ்ரீ. உப. புரிசை நடாதூர் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ந்யாய சிரோமணி.]

வடவேங்கடத்திலிருந்து தென்குமரி வரை இந்த வசந மறியாதார் இல்லை. இதை ஔவையின் வாக்கென்று சொல்லுகிறார்கள். இதை ஸாதாரணமாக, தண்ணீர் எடுக்கும் குளத்தில் தாயைப் பார்த்தால் வீட்டில் சென்று பெண்ணைப்பார்க்கவேண்டிய தில்லை யென்றும் சொல்வ துண்டு. அதாவது: ஒரு பெண்ணை ஒருவனுக்கு விவாஹம் செய்துவைக்கவேணும் என்று எண்ணினால் முதலில் பெண்ணின் தாயாரின் அழகு நடை உடை ஸாமர்த்யம் முதலியன தெரிந்தால், பிறகு பெண்ணைப் பார்க்கவேணு மென்று அவச்ய மில்லை. ஏனென்றால் பெண்ணையும் தாய் தன்னைப்போல் பழக்கியிருப்பாள். அல்லது பெண்ணும் தாயைப்போல் தான் இருக்கவேண்டு மென்று தன்னைப் பழக்கிக் கொள்வாள். இதை நாம் தினமும் கண்கூடாகப் பார்த்துவருகிறோம்.

தவிரவும், புகுந்த அகத்தில் சில இடங்களில் மாமியாருக்கும் நாட்டுப் பெண்ணுக்கும் அதிகமாக ஒற்றுமை யில்லாம லிருப்ப துண்டு. அந்த வீடுகளில் மாமியார் நாட்டுப்பெண்ணை ஏதாவது கடுமையாக வார்த்தை சொன்னால் உடனே நாட்டுப்பெண்ணும் பதில் உரைத்துவிடுவாள். இந்த சொற்களைக் கேட்டு ஸஹியாத மாமிமார்கள் உடனே இந்த வசநத்தைச் சொல்லி நாட்டுப் பெண்ணின் தாயாரையும் சேர்த்து நிந்திப்பார்கள். நாட்டுப் பெண்ணும் இந்த வசநம் முதலியவைகளைக் கேட்டபின்புதான் பதிலுரைப்பதை நிறுத்துவாள்.

பார்யை பர்த்தாவிற்குப் பிடிக்காவிடில், அவர்களுடைய மனவேற்றுமையும் இதரர்களுக்குத் தெரியுமாகில், அவர்களும் அவளுடைய தாயார் நடத்தைகளைச் சொல்லி நிந்திப்பார்கள். இவைகள் ஸாதாரணமான லௌகிக வார்த்தையோடு நின்று விடுகின்றனவா ? அல்லது ஏதாகிலும் இதற்குச் சான்றுண்டா ? என்பதை விசாரிப்போம் :—

ஸ்ரீ ராமனுக்கு யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்யவேணு மென்று சக்ரவர்த்தி ஜநங்களின் அநுமதியின் பேரில் நிச்சயித்திருந்தார். மறுநாள் காலையில் பட்டாபிஷேகம் என்னும் ஸந்தோஷ ஸமாசாரத்தைக் கைகேயினிடம் நேரில் சொல்வதற்குத் தசரதன் அவளுடைய அந்தப் புரத்திற்குச் சென்று அவளை அங்குப் பார்க்க அவள் அங்குக் காணப்படவில்லை. பிறகு மந்தரையினால் கலஹம் செய்யப்பட்டுப் புத்தி கலங்கிய கைகேயி கோபத்தினால் ஆபரணங்க ளில்லாமலும் நல்ல வஸ்த்ர மில்லாமலும் கண்கள் கலங்கித் தரையில் ஓரறையில் படுத்திருக்கக் கண்டார். கண்டதும் தசரதன் அவளைக் கட்டித் தழுவி, ‘உனக்குக் கடுஞ்சினம் உண்டாகக் காரணம் யாது?’ என்று வினவ,

‘நாளை தினம் ஸ்ரீ ராமனுக்குப் பட்டாபிஷேகம் என்று கேள்விப் பட்டேன். அதுதான் காரணம்’ என்று அவள் உரைத்தாள். ‘சம்பராஸுர யுத்தத்தில் நான் தங்களுக்குச் செய்த உதவிக்குக் கைம்மாருகத் தாங்கள் முன்பு எனக்குக் கொடுப்பதாக வாக்களித்த வரன்கள் இரண்டையும் இப்பொழுதே தர வேண்டும்’ என்று கேட்டாள். ‘அதில் ஒன்ருல் பரதனுக்குப் பட்டாபிஷேகத்தையும், மற்ருென்ருல் ஸ்ரீ ராமனைப் பதினுன்கு வருஷம் வனவாஸம் செய்யும்படியும் செய்து வைக்கவேண்டும்’ என்ருள். இதைக் கேட்ட அரசர் மூர்ச்சை யடைந்தார். ப்ரஜ்ஞை உண்டான பிறகு அவன் கைகேயியின் கால்களைப் பிடித்துக்கொண்டு, ‘உனக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் கொடுத்து விடுகிறேன். முதல் வரத்தையும் கொடுக்கிறேன். ஆனுல் ஸ்ரீ ராமனை வனத்திற்கு அனுப்பவேணும் என்று கேட்ட வரத்தை மாத்ரம் கைவிட்டுவிடு’ என்று கேட்டார். இவைகளை அவள் பொருட்படுத்தாமல் அவர் மூர்ச்சித்திருக்குங்கால் ஸ்ரீராமனை வரவழைத்து, ‘தகப்பனின் நியமனம்’ என்று இவ்விஷயங்களைச் சொல்லி, அவனது ப்ரதிஜ்ஞையும் பெற்றுக்கொண்டாள். பிறகு ஸ்ரீராமன் கௌஸல்யை முதலியவர்களிடம் இவ்விஷயத்தைச் சொல்லி அவர்களையும் ஸமாதானம் செய்தபிறகு அரசனுடைய நியமனம் வாங்கவேண்டுமென்று ஸீதையுடன் சென்ருன். அங்கு துக்கிதனுன அரசன் இவர்களைப் பார்த்து,

“ஶோகேநார்த: [illegible] விநஷ்டஸம்ஜ்ஞ: |
ஸோஹம் [illegible]”

என்று மரித்தவன்போல் சேஷ்டை யற்றிருந்தான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஸுமந்த்ரரும், ‘[illegible]’ என்று மூர்ச்சை யடைந்தார். பிறகு மூர்ச்சை தெளிந்து கைகேயியைப் பார்த்துக் கோபாவேசத்தால் அவளை அரசன் மஹிஷீ என்றுகூட எண்ணுமலும் தன்னை ஸூதன் என்று நினையாமலும் சில வார்த்தைகள் சொல்லத் தொடங்கினர். “பதிக்⁴நீம் த்வாமஹம் மந்யே” [உன்னைப் பர்த்தாவைக் கொல்லுகிறவளாக நான் எண்ணுகிறேன்] ஏன்? ‘குலக்⁴நீமபி’ [குலத்தை நாஶம் செய்கிறவள் என்றும் எண்ணுகிறேன்] என்று நிந்தித்தார். பிறகு ‘அபி⁴ஜாதம் ஹி தே மந்யே யதா² மாதுஸ்ததை²வ ச” [உன் தாயாருக்கு எப்படிப்பட்ட ஸ்வபாவ மிருந்ததோ அது உனக்கும் இருப்பதாக எண்ணுகிறேன்.]

“தவ மாதுரஸத்³க்³ராஹம் வித்³ம: பூர்வம் யதா²ஶ்ருதம் |
பிதுஸ்தே வரத³: கஶ்சித்³ த³தௌ³ வரமநுத்தமம் ||
ஸர்வபூ⁴தருதம் தஸ்மாத் ஸஞ்ஜஜ்ஞே வஸுதா⁴தி⁴ப: |
தேந திர்யக்³க³தாநாம் ச பூ⁴தாநாம் விதி³தம் வச: ||
ததோ ஜ்ரும்ப⁴ஸ்ய ஶயநே விருதாத்³ பூ⁴ரிவர்சஸ: |
பிதுஸ்தே விதி³தோ பா⁴வ: ஸ தத்ர ப³ஹுதா⁴ஹஸத் ||”

அதாவது: உன்னுடைய தாயின் அஸத் ஸ்வபாவத்தை முன்பு நாங்கள் கேட்டறிந்திருக்கின்ருேம். உன் தகப்பன் ஒரு கந்தர்வனுடைய வரத்தின் பலத்

தமிழ்நாடு ஆவணக் காப்ப... சென்னை 600 0

தால் ஸர்வ ஜந்துக்களின் வார்த்தைகளை அறிந்துகொள்வன். ஒரு ஸமயம் படுக்கையில் உன் தாயுட னிருக்கும்போது, படுக்கையின்கீழ் பேசிக்கொண்டு செல்லும் எறும்புகளின் வார்த்தைகளுடைய பாவத்தை யறிந்த உன் தமப்பன் அதிகமாகச் சிரித்தான். அதைக் கண்ட உன் தாய் கோபத்தை யடைந்தாள். உடனே பர்த்தாவைப் பார்த்து 'ஹாஸம் தெ நரவதெ ஸஊஜிஜ்ஞாஸாமீ தி அா ப்ரவீஃ' [தாங்கள் சிரித்த காரணத்தை அறிய எண்ணுகிறேன்] என்று சொன்னாள். அதற்கு அரசன்,

"நரவஷொவா அதாம்ஷெவீம் ஷெவிஸம்ஸாஙிதெயஷி ।
தஊொெஊணம்ஸஷ்ஃ ஹவிஷ்யதி நஸம்ஶயஃ ॥ ".

[ஏ தேவி! சிரித்த காரணத்தை உன்னிடம் சொன்னேனாகில் எனக்கு மரணம் உண்டாகும். இதில் ஸம்ஶய மில்லை] என்று பதிலுரைத்தான். பிறகு உன் தாயார் கோப பரவஶையாய் உன் தகப்பனுரைப் பார்த்து "ஶம்ஸஜெீவவாஊ வா" [சிரித்த காரணத்தை என்னிடம் சொல்லி யாகவேணும்; நீ ஜீவித்திருந்தாலும் இல்லாவிடினும்] என்றாள். அரசனும் அவளிடம் உள்ள ப்ரீதியால் கந்தர்வனிடம் சென்று 'நான் என் மஹிஷிக்கு இவ்விஷயத்தைச் சொல்லலாமா?' என்று கேட்டான். அதற்கு அவன் "யதிக்ஷம்ஶம்ஸஸொராஜநு ஊணம்தெ ஹவெ ஜ்ஸவம்" [நீ சொல்லுவாயாகில் உனக்கு மரணம் நிச்சயம்] என்றுரைத்தான். இதைக் கேட்டறிந்த உன் தமப்பன் உன் தாயை ராஜ்யத்திலிருந்து விரட்டிவிட்டு ஸுகமாக விருந்தான் என்ற கதையை இவளுக்குச் சொல்லி, பிறகு 'பிதூஜ்ஞ நஜாயநெ நஊாதஊம் ஞநாஃ [பிள்ளை தகப்பனை அனுஸரிக்கிறான்; பெண் தாயாரை அநுஸரிக்கிறாள்] என்று தாயைப் பார்த்து மகளைக் கொள்ளு என்னும் வசநத்தை எடுத்துச் சொல்லுகிறார். தசரதன் இருந்தாலும் இறந்தாலும் தாயைப் போல் கைகேயியும் வரங்களைப் பெற்றுக்கொள்ளவேணுமென்று நிச்சயித்தா ளென்பது பிறகு நடந்தவைகளால் நன்றாக விளங்குகிறது.

இந்த வசநம் நல்லோர்களிடத்தில் ப்ரயோகிக்கப்படுவதில்லை. கௌஸல்யாதேவி ராமன் கானகம் சென்ற கஷ்டத்தால் மனம் நொந்து அழுதுகொண்டு பர்த்தாவைப் பார்த்து 'யஷ்விதிஷுஷெொகெஷுவூயிதாதெஊஹஷஶஃ' [உன்டைய கீர்த்தியானது மூன்று லோகங்களிலும் ப்ரஸித்தமாக இருக்கிறது] என்று தொடங்கி, 'ஹதம்ஷயாஊாஜ்யஊிஷம்ஸஊாஷும்' என்று சொல்லி முடிக்கிறாள். இதில் 'காட்டிலுள்ள கஷ்டங்களை எப்படி ராம லக்ஷ்மணர்கள் ஸீதையுடன் ஸஹிக்கப்போகிறார்கள்? நான் எப்பொழுது ராமன் முகத்தைப் பார்க்கப்போகிறேன்? ராமன் காட்டிற்குச் சென்றபிறகும் என்னுடைய ஹ்ருதயமானது ஆயிரம் துண்டாக வெடிக்கவில்லையே! ஆகையால் வஜ்ரத்துக்கு ஸமமாக என் ஹ்ருதயத்தை எண்ணுகிறேன்' என்றெல்லாம் கதறி, 'ராமன் காட்டிலிருந்து திரும்பி வந்தாலும் இந்த ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள மாட்டான். எப்படி வேத வேதாந்தம் அறிந்தவர்களும் அநுஷ்டாநபரர்களுமான ப்ராஹ்மணர்க ளிருக்குங்கால் லோபத்தால் வேதவேதாந்தம் அறியாத லௌகிகனான ப்ராஹ்மணனைத் தன் பந்து என்ற வ்யாஜத்தை மாத்ரம் எண்ணி

ஸிமந்த்ரணத்தில் வைத்து, பிறகு வித்வானான ப்ராஹ்மணனைப் புக்தசேஷத்தைச் சாப்பிட ப்ரார்த்தித்தாலும் எப்படி சாப்பிடமாட்டானோ, அதுபோல் ராமன் பரதனுண்ட ராஜ்யத்தைப் பரிபாலிப்பதற்கு இச்சிக்கமாட்டான்' என்றெல்லாம் அநேக த்ருஷ்டாந்தங்கள் சொல்லி 'ஹதம்ஸ்யா' என்று முடிக்கிறாள். இதைக் கேட்ட அரசன் மிகவும் துக்கிதனாய்க் கண்களில் நீர் பெருகக் கைகளைக் கூப்பி தலை வணங்கிக் கௌஸல்யையைப் பார்த்து 'ப்ரஸாதயே த்வாம் கௌஸல்யே ரசிதோயம் மயாஞ்ஜலி:' என்று சொல்லிப் பிறகு

"ஸதஸ்த்ர தர்மவ்ரு நாரீணாம் குணவாந் நிர்குணோபிவா
யஸ்ம் விஷரஸா நா நாம் ப்ரத்யக்ஷம் தைவிதைவதம் ।"

[ஹே தேவீ! தர்மம் அறிந்த ஸ்த்ரீகளுக்குக் குணவானாகிலும் குண மில்லாதவனாகிலும் பர்த்தா வல்லவா ப்ரத்யக்ஷ தெய்வம். ஆகையால் தர்மம் முதலியவைகளை யறிந்த நீ [நாஹஷ்லேவிப்ரியம்வக்தும் து:கிதாவிஸ்து:கிதம்] இன்னும் அதிக கஷ்டத்தை அநுபவித்தாலும் என்னைப் பார்த்து என் மனதிற்கு கஷ்டமுண்டாகக்கூடிய வார்த்தையைச் சொல்லக்கூடா தென்றான். உடனே தேவியும் தன் தவறுதலை யுணர்ந்து [கௌஸல்யாவ்யஸ்ரஜத்பாஷ்பம் ப்ரணாளீவ நவோதகம்".] மழை ஜலமானது குழாய்களிலிருந்து கொட்டுவதுபோல் கண்களிலிருந்து நீரைக் கொட்டினாள். பிறகு கைகளைக் கூப்பிக் கீழேவிழுந்து நமஸ்கரிக்கிறாள் "ப்ரஸீதசிரஸா யாசே பூமௌ நிபதிதாஸ்மிதே" என்று. பிறகு "வத்ஸ்ரசோகாபிதப்தயா தந்மயாபி ஹாஷிதம்" புத்ர சோகத்தினால் என்னால் சில வார்த்தைகள் சொல்லப்பட்டன.

"சோகோ நாசயதே தைர்யம் சோகோ நாசயதே ச்ருதம் ।
சோகோ நாசயதே ஸர்வம் நாஸ்தி சோகஸமோரிபு: ॥"

என்கிறாள். சோகத்தால் சொல்லப்பட்ட வார்த்தை யிது. சோகமானது தைர்யம் முதலியவைகளைப் போக்கடித்துவிட்டது என்று சொல்லி க்ஷமாபணத்திற்கு ப்ரார்த்திக்கிறாள். ஆகையால் இவளுடைய குணத்திற்கும் கைகேயினுடைய குணத்திற்கும், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வாசி யுள்ள தென்று தெரிகின்றது. இதில் குணத்தையுடையவளைப்பற்றிப் பேசும்போது பகவான் வால்மீகிகூட அவள் தாயின் வ்ருத்தாந்தத்தைச் சொல்லவில்லை. ஆகையால் குண மில்லாதவளைப்பற்றிப் பேசும்போதுதான் இந்தப் பழமொழி சொல்லப்படுகிறதென்பது தெரிகிறது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக் கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப் படும். ஏஜண்டுகள் காபி 1-க்கு 4 அணா வீதம் டிபாஸிட் கட்ட வேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

"இலனது வுடையனி தெனநினை வரியவன்
நிலனிடை விசும்பிடை யுருவின னருவினன்
புலனொடு புலனல னொழிவிலன் பரந்தவந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே."

[திருவாய்மொழி 1–3]

விபூத்யத்யாயங்களும் விச்வரூபக் காட்சி அநுபவமும் நெஞ்சில் ஓடிக் கொண்டே யிருக்கின்றன. 'நாந்தோஸ்தி மம திவ்யாநாம் விபூதீநாம் பரந்தப' என்று நிஷேத முறையிலும்,

'விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நம் ஏகாம்சேந ஸ்திதோ ஜகத்।'

'தத்ரைகஸ்தம் ஜகத்க்ருத்ஸ்நம் ப்ரவிபக்தமநேகதா।

'அபச்யத்தேவதேவஸ்ய சரீரே பாண்டவஸ்ததா॥'

'இஹைகஸ்தம் ஜகத் க்ருத்ஸ்நம் பச்யாத்ய ஸசராசரம்

மம தேஹே குடாகேச யச்சாந்யத் த்ரஷ்டுமிச்சஸி॥'

என்று விதி ரூபமாயும் கூறப்பட்ட அநுபவங்களை 'இலனது வுடையனி தெனநினை வரியவன்' என்பதால், அவனுக்கு சேஷமாயும் விபூதியாயு மில்லாதது இல்லை; அவனுக்கு சேஷமான விபூதிகள் இவைதான்; இவ்வளவுதான் என்று அளவிடக்கூடாதவை' என்பதை விளக்குகிறார்.

'ந ததஸ்தி விநா யத் ஸ்யாத் மயா பூதம் சராசரம்'

'த்வே வாவ ப்ரஹ்மணோ ரூபே மூர்த்தம் சாமூர்த்தமேவ ச'

மூர்த்தஞ்சாமூர்த்தஞ்ச தசேதவ ச்ருதம் ச யச்ச ஸச்ச த்யச்ச"

இவை முதலிய ச்ருதிகளில் காட்டப்பட்டிருக்கும் ஸார்வாத்ம்யத்தைத் தாம் காட்சியாக அநுபவித்தவாறே பேசுகிறா ரென்பது ஸ்பஷ்டம். 'நிலனிடை விசும்பிடை யுருவின னருவினன்' என்பது, 'மூர்த்தங்களும் அமூர்த்தங்களும் அவனுருவங்கள்' என்று ச்ருதி கூறிய ரீதியே. 'நிலனிடை விசும்பிடை' என்பதற்கு, 'கீழ் லோகங்களிலும் மேல் லோகங்களிலும்' என்று பொருள். இதை முன்னும் பின்னும் ஒட்டிக்கொள்ளவேண்டும். 'உடையனி தெனநினை வரியவன்' என்பது, 'நேதிநேதி' ச்ருதியையும், அதற்கு 'ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி' என்று ஸூத்ரகாரர் உரைத்த பொருளையும் விளக்குகிற தென்பது ரஸிக்கத்தக்கது. 'இதி' என்பதற்கு, 'ஏதாவந்மாத்ரப்ரகார:' என்பது பொருள் என்பதை விளக்குகிறார். 'இது மட்டு முடையவன்; ஒன்று இல்லாதவன் என்று பரிச்சேதிக்கவே ஸாத்ய மில்லாதவன்' என்பது

ஆழ்வார் விவரணம். 'உடையவன்' என்பதற்கு, 'எல்லாவற்றுக்கும் ஶேஷி, எல்லாவற்றையும் தமக்கு ஸ்வம்மாக உடையவன்' என்பது பொருள். 'ஸத்யம் சாந்ருதம் ச' என்று ப்ரஹ்மத்தினுடைய விபூதிகளை ரூபத்வயமாகக் காட்டியவிடத்தில் உருவு மருவுமாக விபாகம் செய்யப்பட்டதைக் காட்டுகிறார். 'அருவு' என்பதில் ஆகாஶமும் வாயுவும் சேர்ந்தது. 'அமூர்த்தம் வாயு-ஶ்சாந்தரிக்ஷம் ச' என்பது அந்த ச்ருதி. 'அமூர்த்தம்' என்பதில் அங்கே ப்ராணனையும் சேர்த்திருக்கிறது. 'அமூர்த்தம் ப்ராணஃ' அக்னி முதலியன மூர்த்தத்தில் சேர்ந்தவை. ப்ரஹ்மத்தின் ஶேஷவர்க்கங்களாகிய இவை ஜகத் காரண ப்ரஹ்ம மாகமாட்டா வென்பதை ஆகாஶ ப்ராணாத்யதிகரணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீ பாஷ்யத்தில், 'ஆகாஶாதிகரணத்தில், ஆகாஶம் ப்ராணன் முதலிய விஶேஷ ஶப்தங்களால் காரணமும் ஈச்வரனுமான பொருளைக் கூறி, 'ஸர்வ பூதங்களும் ஆகாஶத்திலிருந்தே உண்டாகின்றன; ஆகாஶமே இவை எல்லா வற்றிலு முயர்ந்தது; ஆகாஶமே எல்லோருக்கும் பரம ப்ராப்யமான கதி' என்றும், 'ஸர்வ ப்ராணிகளும் ப்ராணனிலேயே லய மடைகின்றன, ப்ராண னிடத்திலிருந்தே உத்பத்தி யாகின்றன; இப்ரக்ருதி மண்டலத்திற் கப்பால் ஜ்யோதிர்மயமான ஸர்வோத்தமமான உத்தம லோகங்களில் ப்ரகாஶத்தால் வ்யாபிக்கும் ஜ்யோதிஸ்ஸே புருஷனுடைய ஶரீரத்தில் வைச்வாநராக்நி ஜ்யோ திஸ்ஸாக விருப்பது' என்றும் கூறும் ச்ருதிகளில், ஆகாஶமும் ப்ராணனும் ஜ்யோதிஸ்ஸும் ப்ரஹ்மமே யல்லாது பூத பௌதிகங்க ளல்ல வென்று ஸாதிக் கப்பட்டது. ஆழ்வாரும் இந்த அதிகரணங்களை யெல்லா மிங்கே ஸூசநம் செய்கிறார். ஆகாஶ மென்கிற பதத்தால் காரண ப்ரஹ்மத்தைக் குறிப்பதில் பல ரஸங்க ளுண்டு. 'ஆகாஶவத் ஸர்வகதஶ்ச நித்ய:' என்கிற ச்ருதியில் ஆகாஶோபமாநத்தால் ப்ரஹ்மம் உள்ளும் புறமும் எங்கும் தட்டுத் தடையின்றி அப்ரதிஹதமாய் வ்யாபித்துத் தான் வ்யாபித்துள்ள பொருள்கள் அழிகையிலும் தான் அழியாமல் அக்ஷரமாய் இருக்கிற தென்றும் நம் புத்திக்குத் தெரியும்படி ச்ருதி விளக்குகிறது. ஸ்ரீ ஶங்கர பாஷ்யமும், ஆகாஶ மென்று ஜகத்காரண வஸ்துவுக்கு இந்த ஆகாஶ வாக்யத்தில் பெயரிட்டதற்கு இது காரண மென்று காட்டிற்று. எல்லாப் பொருள்களோடு முள்ளும் புறமும் வ்யாபித்துக் கூடி யிருந்தாலும், இப்படி நெருங்கிக் கலந்திருப்பதால் அதற்கு ஒருவித ஸங்க தோஷ மும் லேபமும் வருகிறதில்லை என்கிற வ்யாப்தியோடு கூடிய அஸங்க ஸ்வபாவம் ப்ரஹ்மத்திற்கு முளது. ப்ருஹதாரண்யகத்தில் பல விடங்களில் 'ஸ ஏஷ நேதி நேத்யாத்மா' என்று ப்ரஹ்மத்தைச் சொல்லுமிடத்தில்,

"அக்ருஹ்யோ நஹி க்ருஹ்யதே, அஶீர்யோ நஹி ஶீர்யதே
அஸங்கோ நஹி ஸஜ்யதே" என்றது.

இப்படி ஸர்வ விலக்ஷணமான இந்த ஸர்வாத்மா தன் இயற்கை ஸ்வ பாவத்தாலேயே ஒட்டாத தன்மை யுடையதா யிருப்பதால் ஒட்டுகிறதில்லை. சிதற முடியாமல் உறுதியான தன்மையினால் தான் சுக்குச் சூராகச் சிதறிப்

போவதில்லை. புலன்களுக்கு விஷயமான பொருள்களோடு புலன்களிலும் புலன்களைச் சுற்றியும் எங்கும் வ்யாபித்திருந்தபோதிலும், புலன்களால் க்ரஹிக்க முடியாத தன் இயற்கையான அக்ராஹ்யத் தன்மையால் தான் நம் புலன்களால் க்ரஹிக்கப் படாமலிருக்கிறது என்று கூறப்பட்டது. மேதாவியான ஜநக ராஜருக்கும் ப்ரிய பத்நீயான மைத்ரேயீ முதலியவர்களுக்கும் யாஜ்ஞவல்க்யர் இப்படி உபதேசிக்கிறார். 'ஒழிவிலன் பரந்த'—(புலன்களோடு ஒட்டியும் அவற்றை உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கையிலும், புலன்களுக்கு விஷயமான பொருள்களோடு கூடி வ்யாபித்திருந்தும்) 'புலனலன்' (புலன்களால் க்ரஹிக்கப்படுபவனல்லன்) என்று இப்பாசுரத்தில் இந்த ச்ருதிகளின் பொருள்களை விளக்குகிறார். இங்கே திருவாறுயிரத்தில் 'நிலனிடை விசும்பிடை இலனது உடையனி தெனநினை வரியவன்' என்பதற்கு, "ப்ருதிவ்யந்தரிக்ஷாதி ஸகல லோக வர்த்தியான சேதநாசேதநாத்மக ஸமஸ்த வஸ்துக்களுக்கும் சேஷியாய்" என்று பொருளுரைக்கப்பட்டது. 'புலனொடு புலனலன்' என்பதற்கு, 'ஸர்வ ஜகதாத்மபூதனாய், தத்கததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டனாய்' என்றும், 'ஒருவனை' என்பதற்கு, 'ஸ்வேதர ஸமஸ்த விஸஜாதீயமாய்' என்றும் பொருளுரைக்கப் பட்டது. 'த்ருச்ய பதார்த்த ஸஹசரிதமா யிருந்தும் ஸ்வய மத்ருச்யம் ஸர்வ வஸ்து வ்யாபகம்' என்று ஸ்ரீ ஸாக்ஷாத் ஸ்வாமி. 'இங்கே ஸர்வ ஜகத்தையுமுடையவனாக ஶேஷியாகக் கூறுவதால் ஆழ்வார் ஆகாஶ ப்ராணாதிகரணங்களில் தீர்மானிக்கப்படும் ஸர்வ பூதங்களின் (சிதசித் ஜகத்தின்) காரியத்வமும் சேஷத்வத்தின் ப்ரகாரம் என்று ஸூசிக்கிறார்' என்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமி. 'ஒழிவிலன் பரந்தவந் நலனுடை யொருவன்' என்பதால், ஜ்யோதிரதிகரணத்தையும், அதன் 'ஜ்யோதிஶ்சரணாபிதாநாத்' என்ற முதல் ஸூத்ரத்தையும் விளக்குவது ஸ்பஷ்டம். அந்த ஜ்யோதிர் வாக்யத்தில் 'நாம ரூப வ்யாக்ருத ஸர்வ ப்ரக்ருதி மண்டலத்திற்கு மப்பால் ஒழிவில்லாமல் கால விச்சேதமும் தேஶ விச்சேதமு மில்லாமல் பரந்து வ்யாபித்து ஜ்வலிக்கும் ஜ்யோதிஸ்ஸு அக்நி ஸூர்யாதி ப்ராக்ருத ஜ்யோதிஸ் அல்ல. அந்த வாக்யத்திற்கு முன்னுள்ள 'பாதோऽஸ்ய விஶ்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி' என்ற வாக்யத்தால் கூறப்பட்ட ப்ராக்ருதாப்ராக்ருத விபூதி முழுவதையும் தனக்கு அம்ஶமாயுடைய ஸ்வாமியான ஜ்ஞாநாநந்த ப்ர்ஹ்ம ஜ்யோதிஸ்தான் என்ற பொருளையும், 'ஒழிவிலன் பரந்தவந் நலனுடை யொருவன்' என்று முன் வாக்யமும் அதில் கூறப்பட்ட உபய விபூதி பாதத்வமும் ஹேதுவாதையும் ஸூசிக்கிறார். 'ஒழிவிலன் பரந்த வந்நலன்' என்பது மிக்க விஸ்தார முடைய அநந்தமான ஆநந்த விபூதியையும் குறிக்கும். அதைப் பாதமாக (அம்ஶமாக) உடைய 'அதிபதி' என்பதைக் காட்டுகிறார். 'ஒழிவிலன் பரந்தவந் நலனுடைய யொருவன்' என்பதும், 'ஸர்வத்ர தன்னுடைய ஆநந்த ரூபத்தோடு ஜ்ஞாநக் கண்ணுள்ளார்க்கு ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஆகாஶ மென்னும் திருநாமத்தையுடையவன்' என்ற பொருளும் அதற்குப் பொருந்துவதால், ஆகாஶாதிகரணத்தில் கூறப்படும் காரண வாசியான ஆகாஶ ஶப்தத்தின் பொருளும் விளக்கப்படுகிறது.

[தொடரும்]

ஸ்ரீ:

[illegible]

ஆசார்ய குணகீர்த்தநம்

[ஸ்ரீ. உப. முக்கூர் தட்டை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி வைஸ்-ப்ரின்ஸிபல்,
ஸ்ரீ. அ. மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

[illegible] ।
[illegible] ॥

' [illegible] ' என்றும், ' [illegible] ' என்றும், ' [illegible] ' என்றும், ' [illegible] ' என்றும், ' [illegible] ॥ ' என்றும், ' [illegible] ॥ ' என்றும், ' பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து ' என்றும், இத்யாதி ஸ்ரீஸூக்திகளால் ஸமஸ்த கல்யாண குணங்களோடு கூடின நாராயணனே ஆசார்ய ரூபேண அவதரித்து, நாம் துக்க ஸாகர துரித பரம்பரைகளிலே நோவுபடுகிறபடியைக் கண்டு, நமக்கு ' [illegible] ' என்கிறபடியே ஜ்ஞாநக் கையைக் கொடுத்துத் தூக்கி மோக்ஷாந்த ஐச்வர்யத்தையும் அளிக்கிறுனென்பது ஸுப்ரஸித்தம். ' [illegible] ' என்றும், ' [illegible] ॥ ' என்றும் சொல்லப்பட்ட வசநங்களால் ப்ரதிபாதிக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ [illegible] பேதர்களாயும், ' [illegible] ' என்கிற ச்லோக ப்ரதிபாத்ய ஸம்யக் ஜ்ஞாநவான்களாயும் இருக்கிற மஹான்கள் பூஜ்யர்களில் ப்ரதாநர்கள் என்பது ' ஸம்யக் ஜ்ஞாநாதிகர் ஸத்கார யோக்யரில் ப்ரதாநர் ' என்கிற ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீ ஸூக்தியால் ப்ரஸித்தமாகிறது.

" எற்றி மனத்தெழில் ஞானவிளக்கை யிருளனைத்தும்
மாற்றின வர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ்ச்
சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே."

'बहुविद्याश्रुताध्यानवान्' இத்யாதி ஸ்ரீ ஸூக்திகளால் பூர்வோக்த லக்ஷணோபேத ஆசார்யர்கள் விஷயத்தில் ஒருவித கைம்மாறையும் ச்ரிய:பதியும் காணகில்லான் என்பதும் ப்ரஸித்த மாகிறது. ஆனால் 'அபசார வர்க்கங்களில் ஆசார்யர்கள் விஷயத்தில் க்ருதக்நதையடியாக வரும் குரு த்ரோஹம் ப்ரதாநம்' என்கிற ஸ்ரீ தேஶிகன் ஸ்ரீ ஸூக்தியை யநுஸரித்தும், 'कृतघ्ने नास्ति निष्कृतिः' என்கிற வசநத்தை அநுஸரித்தும், 'यतो वाचो निवर्तन्ते' என்கிறபடி வேதத்திற்கும் அவிஷயமான ஆசார்யர்களுடைய கல்யாண குணங்களில் 'போற்றி யுகப்பதும்' என்கிறபடியே ஏதேனும் ஒரு ப்ரகாரத்தால் ஈடுபடுவது சிஷ்ய க்ருத்ய மென்றும் புலப்படுகிறது. ஒரு மநுஷ்யன் ஸர்வபாப விநிர்முக்தனாய், 'सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चितेति' என்கிற தைத்திரீய உபநிஷத்தின்படி, 'ப்ரஹ்ம தத் கல்யாண குணங்கள் இரண்டையும் அநுபவிப்பதற்குப் பகவானுடைய குண கர்ம நாமங்களுடைய ஸமுதாய கீர்த்தநம் வேண்டாம்; அதில் ஏதேனும் ஒன்று போதும்' என்பது 'एतावतालमघनिर्हरणाय पुंसां सङ्कीर्तनं भगवतो गुणकर्मनाम्नाम् । विक्रुश्य पुत्रमघवान् यदजामिलोऽपि नारायणेति म्रियमाण इयाय मुक्तिम् ।' என்கிற ஸ்ரீ பாகவதோக்தி ப்ரஸித்தமானபடியால் ஶிஷ்யனும் முன் சொல்லப்பட்ட லக்ஷணங்களோடு கூடின ஆசார்யர்களுடைய குணகர்மநாமாந்யதம ஸங்கீர்த்தநத்தால் முன் சொல்லப்பட்ட பரம புருஷார்த்தத்தை அடைகிறானென்பதில் ஸந்தேஹ மில்லை.

ஆகையால் ப்ரக்ருதம் ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமதித்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகன் அடியேனுக்கு ஸாமாந்ய ஶாஸ்த்ரத்தையும் அத்யாத்ம ஶாஸ்த்ரத்தையும் ஸாதித்தும், மோக்ஷாந்த ஐச்வர்யத்தையும் அநுக்ரஹித்தபடியால், ப்ரதாந ஶதகத்தில் ஸ்ரீ தேஶிகன் 'श्रेयसाधनानां साधनः' என்று ஸாதித்தருளியபடி, ஸர்வ ப்ரகாரத்திலும் ப்ரதாநபரமாசார்யனானபடியால் அம்மஹானுடைய கல்யாணகுணாதிகளில் ஏதேனும் ஒரு ப்ரகாரத்தால் அந்வயித்து ஆத்மாவை க்ருதார்த்ததையுடன் கூடியதாகச் செய்துவைப்பது முன் சொன்னபடி ஸ்வரூப ப்ராப்தமானபடியால், அதை உத்தேசித்து மந்தமதியான அடியேன் இந்தக் கைங்கர்யத்தில் அந்வயிக்கலானேன்.

பகவானிடத்திலிருக்கிற அநேக கல்யாணகுணங்களில் ஜ்ஞாநம், பலம், ஐச்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ் இந்த ஆறு குணங்களும் எப்படி ப்ரதாநங்களோ, அதேமாதிரி நம் அழகியசிங்கரிடத்தி லிருக்கிற கல்யாணகுணங்களில் ப்ரதாநங்களாயும் அந்யாத்ருஶங்களாயும், சுக்ல வர்ஷம் முதற்கொண்டு இது பர்யந்தம் அடியேன் அநுபவத்தில் தோன்றினவைகளான சிலவற்றை ஸ்தாலீ புலாக ந்யாயேந இங்கு விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்: ஜ்ஞாநம், அநுஷ்டாநம், வைராக்யம், ஸௌலப்யம், ஔதார்யம், க்ஷமை என்று இந்தக் குணங்கள்

நம் அழகியசிங்கரிடத்தில் அங்யாத்ருஶங்கள்; இது எல்லோருக்கும் ப்ரஸித்த மானதே. ஆனாலும், 'ஹாஸ்யத்வம் ந ஸமீக்ஷ்யே' என்கிறபடி விஜ்ஞாபித்துக் கொள்கிறேன்.

1. ஜ்ஞாநம்—பூர்வாச்ரமத்தில் எல்லா ஸதஸ்ஸிலும் பரீக்ஷாதிகாரியாக எழுந்தருளியிருந்தபடியாலும், இந்த ஆஸ்தாநத்தில் எழுந்தருளி மாலோல ஸதஸ்ஸை ஆரம்பித்து அநேக வித்வான்களை எழுந்தருளப்பண்ணி விஷய விசாரத்தை நடத்துகிற ரீதியாலும் எல்லோருக்கும் ஸுப்ரஸித்தம்.

2. அநுஷ்டாநம்—'ஸ்வயமாசரதே யஸ்மாத்' என்பதற்கு இம்மஹான் தான் ப்ரதாந லக்ஷ்யபூதர் என்பது திண்ணம்.

3. வைராக்யம்—ஆச்ரம ஸ்வீகாரத்தினாலேயே இது தெரிந்ததே. ஆனாலும் அடியேனிடத்தில் ஒரு ஸமயத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஒரு விஷயத்தைப்பற்றி ஸாதித்ததிலிருந்து வைராக்யம் எப்படிப்பட்டதென்பது எல்லாருக்கும் தெரிவதற்காக அதை இங்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பூர்வாச்ரமத்தில் திருவநந்தபுரம் ஸ்ரீ மஹாராஜாவினால் நடத்தப்படும் ஸதஸ்ஸுக்கு எழுந்தருளிய ஸமயம், அங்கு இம்மஹானுடைய ஜ்ஞாநாதிகளை ஸதஸ்ஸில் மஹாராஜா அநுபவித்து அச்சமயமே அங்கிருக்கும் கலாஶாலையில் 200 ரூ. வேதநத்தில் எழுந்தருளியிருக்கும்படி ப்ரார்த்திக்க, ஸம்ஸாரத்தில் க்லேஶ தசையிலும் வேண்டாமென்று ஸாதித்து எழுந்தருளியாகிவிட்டதாம். இதல்லவோ வைராக்யம்?

4. ஸௌலப்யம்:— நம்மாழ்வார் திருவாய்மொழி முதற்பத்தில் மூன்றாவது தஶகத்தில் பகவத் ஸௌலப்யத்தில் 'எத்திறம்!' என்று மோஹித்துக் கிடந்தாற்போலல்லவா நம் அழகியசிங்கரிடம் இருக்கும் ஸௌலப்யத்தில் நாம் 'எத்திறம்!' என்று மோஹித்துக் கிடக்கவேண்டியதாயிருக்கிறது.

5. ஔதார்யம்—இது குழந்தை முதற்கொண்டு வ்ருத்தர்கள் பர்யந்தம் ஸுப்ரஸித்தம். இந்த துர்ப்பிக்ஷ காலத்திலும் ஸம்ஸ்க்ருத பாஷையின் க்ஷீண தசையை உத்தேசித்து த்வயம் விளைந்த திருப்பதியான ஸ்ரீமதுராந்தகத்தில் ஸுமார் 50,000 ரூபாயில், வேத திவ்யப்ரபந்த ஸம்ஸ்க்ருத மஹாகலாசாலையை நிர்மாணம் செய்து, அக்கலாசாலையில் ஆஹாராதி ஸர்வ ஸௌகர்யங்களோடு 80 வித்யார்த்திகளைச் சேர்த்து அந்தந்த வகுப்பிற்குத் தகுந்த அத்யாபக ஸ்வாமிகளையும் நியமித்து, அந்த ஸ்வாமிகளுக்கும் நித்யவாஸஞ் செய்ய 40,000 ரூபாய் செலவு செய்து க்ருஹங்களை நிர்மாணம் செய்து அதில் வஸித்து வரும்படி நியமித்து, இப்படி ஒரு பெரிய கார்யத்தை ப்ரதிதிநம் வ்ருத்தியுடன் நடத்திவருகிற ரீதியைப் பார்த்தால், இந்த மஹானுடைய ஔதார்யத்தை என்னவென்று வர்ணிப்பது? ஸிம்ஹாவலோக ந்யாயேந இங்கு ஒன்று விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். இதனால் இம்மஹானுக்கு உபய வேதாந்தத்திலும் இருக்கிற அபிநிவேஶம் த்யோதிதமாகிறது.

6. க்ஷமா :—'க்ஷமயா ப்ருதிவீஸம:' என்று ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் விஷயமாகச் சொன்னது ஸ்ரீ அழகிய சிங்கருக்கும் மிகவும் தகுந்ததே. இதற்கு ஒரு சிறிய உதாஹரணத்துடன் அடியேனுடைய கைங்கர்யத்தை முடித்துக்கொள்ளுகிறேன். ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் ஸ்ரீதஶாவதாரன் ஸந்நிதியில் இரண்டு ஸ்ரீ அழகிய சிங்கர்களும் எழுந்தருளியிருந்த போது ஸ்ரீ பெரிய அழகியசிங்கர் நியமநத்தையே ஶிரஸா வஹித்து எத்தனையோ ஸம்பவங்களைக் கணிசிக்காம லிருந்ததே ப்ரதாந உதாஹரணம்.

[illegible] ।
[illegible] ।

ஸ்ரீ :

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி ஞூ ஆவணி மீ [1950 ஞூ ஆகஸ்ட் - ஸெப்டெம்பர் மீ.]

[தக்ஷிணாயநம், வர்ஷ ருது, ஸிம்ஹ மீ.]

17—8—50	1உ	வியாழக்கிழமை	...	சூந்ய திதி; இன்று ஸிம்ஹ ஸங்க்ரமண தர்ப்பணம்
18—8—50	2உ	வெள்ளிக்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல ஷஷ்டி திதி
19—8—50	3உ	சனிக்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல ஸப்தமி திதி
23—8—50	7உ	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
26—8—50	10உ	சனிக்கிழமை	...	ரிக் உபாகர்மம்
27—8—50	11உ	ஞாயிற்றுக்கிழமை	...	யஜுருபாகர்மம்
28—8—50	12உ	திங்கட்கிழமை	...	காயத்ரீ ஜபம்
4—9—50	19உ	திங்கட்கிழமை	...	ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தீ
5—9—50	20உ	செவ்வாய்க்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண நவமி திதி
6—9—50	21உ	புதன்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண தசமி திதி
7—9—50	22உ	வியாழக்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண ஏகாதசி திதி
8—9—50	23உ	வெள்ளிக்கிழமை		ஸிம்ஹ க்ருஷ்ண த்வாதசி திதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம்
9—9—50	24உ	சனிக்கிழமை	...	ஸிம்ஹ க்ருஷ்ண த்ரயோதசி திதி
10—9—50	25உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸிம்ஹக்ருஷ்ண சதுர்தசி திதி
11—9—50	26உ	திங்கட்கிழமை	...	அமாவாஸ்யைதிதி ; ஸர்வ அமாவாஸ்யை
12—9—50	27உ	செவ்வாய்க்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல ப்ரதமை திதி
13—9—50	28உ	புதன்கிழமை	...	ஸாமோபாகர்மம்
15—9—50	30உ	வெள்ளிக்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல சதுர்த்தி திதி
16—9—50	31உ	சனிக்கிழமை	...	ஸிம்ஹ சுக்ல பஞ்சமி திதி; ரிஷி பஞ்சமி; கந்யா ரவி 53-36; மறுநாள் ஸங்க்ரமண தர்ப்பணம்,

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

நற்போதுபோக்கு

(தோழிகளின் ஸல்லாபம்)

(ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸா சார்யர், பள்ளிக்கூட ஆசிரியர், முக்கூர்.)

ஸுசீலா—தோழி! ஸுகுணு! உனக்கு என்ன தைர்யம்! என்ன அலக்ஷ்யம்!

ஸுகுணு—ஸகி! ஸுசீலே! உனக்கு மங்களம் உண்டாகட்டும்; ஏன் அவ்விதம் சொல்கிருய்? நான் அலக்ஷ்யம் செய்யவில்லையே!

ஸுசீலா—நீயா அலக்ஷ்யம் செய்யவில்லை? பத்து நிமிஷமாக நான் உன்னுடைய கண்களுக்கு எதிரில் நிற்கிறேன்; என்னைக் கவனிக்கவில்லை; அப்படியிருக்க, அலக்ஷ்யம் செய்யவில்லை யென்று எவ்விதம் சொல்லலாம்?

ஸுகுணு—ஸுசீலே! நீ சொல்வது சரியாயிருக்கலாம்; நான் ஏதோ ஒரு விஷயம் யோசனை செய்துகொண்டிருந்தேன்; அந்த ஸமயம் நீ என்னிடம் வந்திருக்கலாம்; ஆகையால் கொஞ்சம் கவனியாமலிருக்கலாம்.

ஸுசீலா—நீ யோசிக்கும்போது நான் உன்னிடம் வந்தால் அப்போது என்னைக் கவனிக்கலாகாதா?

ஸுகுணு—ஸுசீலே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். உலகத்தில் எல்லோருக்கும் ஒரு வஸ்து கண்களுக்குப் புலப்படவேண்டுமானுல் (அதாவது: இது குடம் என்கிற எண்ணம் உண்டாகவேண்டுமானுல்) முதலில் ஆத்மா மனதுடன் சேரவேண்டும்; மனது கண்ணுகிற இந்திரியத்துடன் சேரவேண்டும்; இந்திரியமாகிற கண்கள் குடத்துடன் சேரவேண்டும். அதன் பிறகுதான் இது குடம் என்கிற ஜ்ஞாநம் உண்டாகிறது. ஆத்மாவிறகு மநஸ்ஸோடுசேர்க்கை யிராமல் இந்த்ரியங்கள் வஸ்துவிடம் ஸம்பந்தப்பட்டால் அந்த வஸ்துவின் ப்ரத்யக்ஷம் அதாவது: இது குடம் என்கிற ஜ்ஞாநம் உண்டாகாது. நான் எதையோ யோசிக்கும் காலத்தில் நீ என் கண்களுக்கு எதிரில் நின்றுகொண்டிருந்தமையால் உன்னைக் கவனியாமல் இருக்க வேண்டியதாயிற்று. இல்லாவிடில் நான் அப்படி இருப்பேனு? என் ஸ்வபாவம் உனக்குத் தெரியாதா?

ஸுசீலா—ஸகி! நான் சொன்னதைப் பொறுத்துக்கொள். நீ என்ன விஷயம் யோசித்துக்கொண்டிருந்தாய்? அது எனக்குச் சொல்லக்கூடியதாகில் சொல்லவேணும்.

ஸுகுணா—தோழி! உன்னுடன் சொல்லாத ரஹஸ்யங்கூட உண்டோ? நேற்று ஒரு மஹான் உபந்யாஸம் செய்தார். அதில் பகவான் உலகத்தை ஸ்ருஷ்டிக்கிறது தன்னுடைய ப்ரயோஜனத்திற்கா அல்லது இந்த ஜீவாத்மாக்களுடைய க்ஷேமத்திற்கா என்கிற விஷயம் விரிவாக வெகுநேரம் உபந்யஸிக்கப்பட்டது. அந்த விஷயத்தை யோசித்துக்கொண்டிருந்தேன். அப்போது நீ வந்தாய். உன் வாயில் அறைபட ஆளானேன்.

ஸுசீலா—[புன்சிரிப்புடன்] ஸரி! இனி என் வாயில் அறைபடமாட்டாய். பூர்வாசாரியர்கள் அதுவிஷயமாய் எவ்விதம் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள்? க்ருபைசெய்து எனக்கு நன்றாகச் சொல்லவேண்டும். உன்னிடமிருந்துதான் நான் வெகு விஷயம் அறியவேண்டும்.

ஸுகுணா—பூர்வாசார்யர்களில் ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில்

“ த்வதாஶ்ரிதாநாம் ஜகதுத்பவஸ்திதி ப்ரணாஶஸம்ஸாரவிமோசநாதய: ।
பவந்தி லீலா விதயஶ்ச வைதிகாஸ்த்வதீயகம்பீரமநோநுஸாரிண: ॥

வ

[உமக்கு இவ்வுலகத்தை ஆக்கல் அளித்தல் அழித்தல் மோக்ஷம் கொடுத்தல் இந்த லீலைகளெல்லாம் உம்மையடைந்த பக்தர்களுக்காகவே யன்றி வேறில்லை. வேதத்தில் சொல்லப்பட்ட விதிகளெல்லாம் உமது பக்தர்களுடைய கம்பீரமான மனஸ்ஸை அநுசரித்தது] என்பதால் இவ்வுலக ஸ்ருஷ்டி ஜீவாத்மாக்களுடைய க்ஷேமத்திற்காக என்று ஏற்படுகிறது.

ஸுசீலா:—இன்னம் இதர ஆசார்யர்களுடைய திருவுள்ளம் எப்படி?

ஸுகுணா:—பகவானுக்கு உலகத்தைப் படைத்தல் காப்பாற்றுதல் முதலியவைகள் வேடிக்கைகள் என்கிற விஷயம் எல்லா ஆசார்யர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஸூத்ரகாரரும் அவ்விதமே சொல்கிறார்.

ஸுசீலா:—எந்த எந்த ஆசாரியர்கள் சொல்லியிருக்கிறார்கள்? அதை விளங்கச் சொல்லவேண்டும்.

ஸுகுணா:—ஆழ்வான் ஸ்ரீ ஸ்தவத்தில் ‘ஸ்வஸ்தி ஶ்ரீர்திஶதாத்’ என்னும் ச்லோகத்தில் ‘க்ரீடேயம்’ [இந்த விளையாட்டு] என்கிறார். பட்டர் ஸ்ரீ குணரத்நகோசத்தில் ‘காமம் ஸம்பாதி யோக்யதாம்’ என்கிற ச்லோகத்திலும், ‘ஸம்ஸாரீநு விஷயாநு வ்ருத்ஸம்ஸ்ருதீ’ என்கிற ச்லோகத்திலும் இந்த உலகத்தை லக்ஷ்மியினுடைய விளையாட்டு என்கிறார். ஸ்ரீ வேதாந்ததேசிகனும் ஸ்ரீ ஸ்துதியில்,

பஶ்யந்தீஷு ஶ்ருதிஷு பரிதஸ்ஸூரிப்ருந்தேந ஸார்த்தம்
மத்யேக்ருத்ய த்ரிகுணபலகம் நிர்மிதஸ்தாநபேதம் ।
விஶ்வாதீஶப்ரணயிநி ஸதா விப்ரமத்யூதவ்ருத்தௌ
ப்ரஹ்மேஶாத்யா தததி யுவயோரக்ஷஶாரப்ரசாரம் ॥ ”

என்னும் இந்த ச்லோகத்தில், பெருமாளும் பிராட்டியும் வேடிக்கைக்காக ஸத்வ ரஜஸ் தமஸ் என்னும் மூன்று உருவமாயிருக்கிற ப்ரக்ருதியை ஆட்டப் பலகையாகவும் ப்ரஹ்ம பதவி முதல் கடைசீ புழு ஜன்மம் வரையுள்ள ஸ்தாநங்களை உயர்ந்த தாழ்ந்த கட்டங்களாகவும் ப்ரஹ்மா முதல் புழு வரையிலுள்ள ஜீவாத்மாக்களை ஆட்டக் காய்களாகவும் ஏற்படுத்தி, நித்யஸூரிகளுடன் வேதங்கள் பார்த்துக்கொண்டிருக்க, ஆட்டம் விளையாடுகிறார்கள். அதில் எல்லா ஜீவாத்மாக்களும் தங்களுடைய புண்ய பாபங்களுக்குத் தக்க உயர்ந்த தாழ்ந்த பதவியை யடைகிறார்கள்.

ஆட்டக் காய்கள் தாழ்ந்த கட்டத்தில் இருக்கும்போது ஆட்டம் ஆடுவதில் பந்தயம் நல்லதாக விழுந்தால் உயர்ந்த கட்டத்தில் ஏறும். உயர்ந்த கட்டத்தில் இருக்கும் காலத்தில் பந்தயம் குறைவாக விழுந்தால் மறுபடி தாழ்ந்த கட்டத்தில் வரும். பந்தயம் நல்லதாகவும் குறைவாகவும் விழுவது ஜீவாத்மாக்களுடைய புண்ய பாபாநுகுணமாக என்கிறார். இவ்விதம் ஜீவாத்மாக்கள் புண்ய பாபங்கள் செய்து, அவற்றிற்குப் பலனாகிய உயர்ந்த பதவியையும் தாழ்ந்த பதவியையும் அடைகிறார்கள். இந்த அர்த்தத்தை முதலாழ்வார் முதல் திருவந்தாதியில் 'மகிழலகு ஒன்றேபோல் மாறும் பல்யாக்கை' என்றும் பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் 'வடிவைநகவாவாபிகெவகவுாஸூயொ: காகணிகாவஸ-வணஃகொடிெூா:' என்றும் சொன்னார்கள். மகிழ மரத்தின் விதையை ஆட்டக் காயாக வைத்து ஆடுவது சிலரின் வழக்கம். ஆட்டத்தில் அந்த விதை எப்படி உயர்ந்த தாழ்ந்த ஸ்தாநம் போகிறதோ அதுபோல் ஜீவாத்மாக்கள் உயர்ந்த தாழ்ந்த பல சரீரங்கள் அடைகிறார்கள். சிலர் பலகரையை ஆட்டக் காயாக வைத்து ஆடுவார்கள். அந்தப் பலகரையானது ஒரு காசு மதிப்புள்ள தாழ்ந்த கட்டத்திலும் அதிலிருந்து கோடி பொன் மதிப்புள்ள உயர்ந்த கட்டம் வரை மாறிமாறி போகிறதோ அதுபோல் ஜீவாத்மாக்கள் உயர்ந்த தாழ்ந்த சரீரம் மாறிமாறி அடைகிறார்கள்.

ஸுசீலா:—தோழீ! ஸுகுணே! பகவானுக்கு இவ்வுலகம் லீலை அல்லது விளையாட்டு என்பதில் எல்லா ஆசார்யர்களும் ஒரே அபிப்ராயந்தான் கொண்டிருக்கிறார்கள். மேலே சொல்.

ஸுகுணா:—ஸ்ரீ நிகமாந்த தேசிகன் ஶரணாகதி தீபிகையில்

"ஷதூாஸி திவூயதநவூஉவெரவாதீூ
ஹூா;யஃம ஸஷெவஹவதா ஹுயஜெவஷிஸூ ।
ஂீவஹூகாமஶதஷிஹதீூஉவாவூயெக்ஷா
உவஹூா ஜலிஷூஉநவாயஉவாயஶாஹ-ஃ"

என்பதால் பகவான் இவ்வுலகத்தைத் தன்னுடைய ப்ரயோஜனத்திற்காக உண்டு பண்ணுகிறான் என்று ஏற்படுகிறது. மேலும் சரணாகதி தீபிகையில் 'கஉஃஹூநாஷிவிஷஜெஷ- ஷஜொ டியாஉ-ஃ' என்கிறதிலும் இதுபோல்

அபிப்ராயப்படுகிறார். ஆகையால் இவ்வுலகத்தின் ஸ்ருஷ்டி பகவானுடைய ப்ரயோஜனத்துக்காக என்று ஏற்படுகிறது.

ஸுசீலா:—இவ்வுலக ஸ்ருஷ்டி பகவானுடைய ப்ரயோஜனம் என்பதால் பகவானுக்கு இதனால் என்ன ப்ரயோஜனம்? அவர் பரிபூர்ணகாமன். அவருக்கு நிகர் யாவருமில்லை. அப்படியிருக்க மற்றொரு வஸ்துவால் அவருக்கு என்ன உயர்வு ஏற்படப்போகிறது? அதற்குக் காரணம் சொல்.

ஸுகுண:—ஸகி! சொல்கிறேன் கேள்; ஜீவாத்மாக்கள் அனைவரும் பகவானுடைய வேலைக்காரர்கள். பகவானுடைய கைங்கர்யமே ஜீவாத்மாக்களுக்கு ஸ்வரூப ப்ராப்தம். அவைகள் பகவானுடைய சொந்த சொத்துக்கள். சொத்துக்காரன் தன்னுடைய சொத்துக்களை எவ்விதமாவது அடையவேண்டியது கடமை. தன்னுடைய இருப்பிடமாகிய ஸ்ரீ வைகுண்டத்தில் தன்னுடைய சொத்தாகிய இந்த ஜீவாத்மாக்கள் வந்து சேர்ந்தால் தன் சொத்துக்கள் தன்னிடம் சேர்ந்த மாதிரி. அப்படி அடைவதற்கு ஜீவாத்மாக்களுக்கு ஸ்வரூப ஜ்ஞானம் முதலியவை வேண்டும். அப்படி ஸ்வரூப ஜ்ஞானம் முதலியவைகள் உள்ளவர்கள் 'மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித்யததி ஸித்தயே। யததாமபி ஸித்தாநாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத:' என்றபடி ஆயிரம் மனிதர்களுக்குள் ஒருவன் ஸித்தியடைய ப்ரயத்நம் செய்கிறான். அவ்விதம் ப்ரயத்நம் செய்து ஸித்தியடைந்த ஆயிரத்தில் ஒருவன் என்னை உண்மையாக அறிகிறான் என்று கீதாசார்யன் சொன்ன மாதிரி ரொம்பவும் துர்லபம். அப்படி லக்ஷத்தில் ஒருவராவது தன் லோகத்திற்கு வருவார்கள் என்கிற எண்ணத்தால் இந்த உலகத்தை ஸ்ருஷ்டிக்கிறான். இதுதான் பகவானுக்கு ப்ரயோஜனம்.

ஸுசீலா:—ஸகீ! நீ சொன்னது ரொம்பவும் சரி. பகவான் ஜீவர்களிடத்தில் கருணையால் இவ்வுலகத்தை ஸ்ருஷ்டிக்கிறான் என்பது எப்படி? அதை எனக்கு நன்றாகச் சொல்.

ஸுகுண—சொல்கிறேன், கவனமாய்க் கேள். இவ்வுலகத்திற்கு ஸ்ருஷ்டி என்றும் ப்ரளயம் என்றும் இரண்டு வித அவஸ்தைகள் உண்டு. ஸ்ருஷ்டி காலத்தில் ஜீவாத்மாக்கள் ஸ்தூலமான அநேக சரீரங்கள் எடுக்கிறார்கள். ப்ரளய காலத்தில் இந்த ஸ்தூல சரீரங்கள் நசித்து விடும். அப்போது ஜீவாத்மாக்கள் மூலப்ரக்ருதியில் கலந்து உரைகல்லில் இழைத்த பொன்னைப் போல் அசித் கல்பமாய்க் கிடக்கும். அவ்விதம் அசித் கல்பமாய்க் கிடக்கும் ஜீவர்களைப் பார்த்து பகவானும், ஐந்து பிள்ளைகளுடன் கூடிய ஒரு குடும்பி தன் பிள்ளைகளில் நால்வர் குடும்பத்தில் ஸர்வ சௌக்யங்களை அனுபவித்துக் கொண்டிருக்க அவர்களில் ஒருவன் குடும்பத்தில் சேராதவனாய் நாடோடியாய் திரிந்துகொண்டிருக்க இவனை எவ்விதமாகவாவது சீர்படுத்தி குடும்பத்தில் சேர்ப்பிக்கவேண்டும் என்று எண்ணிக் கார்யம் செய்வதுபோல் 'இந்த ஜீவாத்மாக்கள் நித்ய முக்தர்கள் போல் ஸ்ரீ வைகுண்டத்தில் ஸர்வ வித கைங்கர்யங்களைச் செய்து பரமாநந்தம் அடைய யோக்யதை யுடையவர்கள்

இவர்களுக்கு சரீரங்களைக் கொடுத்தால் அச்சரீரங்களைக்கொண்டு நற்காரியங்கள் செய்து நற்கதியடைவார்கள்' என்கிற தயையால் சரீரங்களைக் கொடுத்தார். இந்த விஷயத்தை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்,

"அசிதவிசிஷ்டாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத:
கரணகளேபரைர் கடயிதும் தயமாந மநா: ।
வரத நிஜேச்சயைவ பரவாநகரோ: ப்ரக்ருதிம்
மஹதபிமாந பூதகரணாவளிகோரகிணீம் ॥"

[ஹே வரத! நீ ப்ரளய காலத்தில் அசித்தைப்போல் கிடக்கும் ஜீவர்களைப் பார்த்து மிகவும் தயையுடன் கூடியவனாய் அவைகளுக்கு சரீரங்களைக் கொடுக்கவேண்டிய எண்ணத்தால் மூலப்ரக்ருதியை மஹத் அஹங்காரங்கள் பஞ்ச பூதங்கள் இந்த்ரியங்கள் இவைகள் உள்ளதாகச் செய்தாய்] என்கிறார். ஸ்ரீ தேசிகனும் தயாசதகத்தில், 'அசிதவிசிஷ்டாந் ப்ரளயே' என்கிற ச்லோகத்தால் சொன்னார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உப. கல்யாணபுரம் S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், M.A., வித்வான், L.T., ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு]

நம்முடைய ஸ்ரீ ராமாநுஜ தர்சநம் உலகத்தையே ரக்ஷிக்கக்கூடிய உத்தம தர்சநம். 'ஸர்வஹிதைகஹிதைஷிணீ' என்பது வேறெந்த தர்சநத்திற்கும் சொல்வது பொருந்தாது. ஸ்ரீ வைஷ்ணவனுடைய ஸ்வரூபத்தைத் திரட்டிக்கொடுக்குங் காலத்தில் 'ய: ஸர்வத்ர ஸமாஹிதோ பவதி ஸ வைஷ்ணவோ வைஷ்ணவ ப்ரியணீயதரம் ஸ்வாமி' என்று உலகத்தின் நிலையற்ற இன்பங்களில் பற்றறுத்து, ஸர்வேச்வரனது தொண்டனொருவன் தன்னை வஸ்த்ரம்போலவும் பாதுகை போலவும் இஷ்டப்படி உபயோகிக்க விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையே மேன்மையானதென்று வற்புறுத்துகிறது. விலையில்லாத சில வைரங்கள் சிற்சில வெளிச்சங்களில்தான் தங்கள் முழு ஒளியையுங் காட்டுமென்று வைர பரீக்ஷகர்கள் சொல்லக் கேட்டதுண்டு. ஸர்வேச்வரனை விலையில்லா மாணிக்கம், ஆழ்வார் என்கிற பேரொளியில் வைத்துப் பார்த்துத் தான், தன் முழுச் சுடரோடும் அழகோடும் ப்ரகாசிக்க முடிகிறது. இந்த ஆழ்வார்களைப்போல சேதநனுக்கு ஸர்வவித பந்துக்களைக் காண முடியுமா?

ஆழ்வார்களால் சேதநன் உயிர் பெறுகிறான். வாழ்வைப் பெறுகிறான். தன்மையைப் பெறுகிறான். கடிநமான உபாயங்களிற் கலங்கி எங்கும் ஜீவனை, 'வாராய்! உனக்கு இத்தகைய கலக்கம் வேண்டாம். தயாநிதி

யான வாஸுதேவனைச் சேர்' என்றார்கள். அவனுடைய அநந்தமான வைபவத்தையும், அநந்தமான ஶக்தியையும் அதிஶயித்துச் சுடர்விடுகின்ற அவனது அபார காருண்யத்தையும் ஸௌஶீல்யத்தையும் நமக்கு எடுத்துக் காட்டினார்கள். நெஞ்சு கனிந்து அவனைக் காதலிப்பவர்களின் தோஷங்களை அவன் மறக்கிறா னென்றார்கள். ஹ்ருதய பூர்வமாகத் தன் பாபங்களுக்கு வருந்திக் கண்ணீர் வடிப்பவர்கள் அவன் க்ருபையை எளிதில் பெறுவார் என்றார்கள். ஷட்ரஸோபேதமான அந்நம், ரூப ரஸங்களால் ஸர்வோத்க்ருஷ்டமான பலம், நறுமணத்தால் உயர்ந்த மலர், இவற்றையெல்லாம் விடப் பாவச் சுமைகளில் பதறி வருந்தி 'நடுங்கி நான் வந்துன் திருவடியடைந்தேன்" என்று ஶரண மடைபவர்களின் உஷ்ணமான கண்ணீர்ச் சொட்டுகள் அவனுக்குப் பரம போக்யமாம். வருந்தி வந்தடைபவனது கண்ணீர் பாண்டிய நாட்டின் கொற்கைத் துறைமுகத்தில் விளையும் விலையுயர்ந்த முத்தினையும் விட அவனுக்குப் போக்யமாம்! பரமபதத்தில் நித்ய ஶேஷனான ஶேஷனது குளிர்ச்சி, மென்மை, நறுமணம் முதலிய இனிய குணங்கள் வாய்க்கப்பெற்ற உடலாகிற படுக்கையைவிடப் பச்சாத்தாபத்தினால் கொதித்துக் குளிர்ந்த ஒரு சேதனனது உள்ளமே அவனுக்கும் பரம போக்யமாம்! சுருங்கச் சொல்லில் ஆழ்வார்களின் மதம் யாது? அர்ச்சாவதாரமே உபாய உபேய மென்றும், தயையே அவனுக்கு நிரூபக தர்ம மென்றும், அதனால் அவன் ஸர்வ ஸேவ்ய னென்பதுமே.

இந்த ச்ரிய:பதி, 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப' என்று எல்லையற்ற கருணையால் நம்மைப் படைத்தான். நம்மிடம் அவன் கேட்பது என்ன? பூமியல்ல; பணமல்ல; ச்ரிய:பதியான அவன் ஒரு காலா ளளந்தது இவ்வானகமும்; மண்ணகமும் ப்ரஹ்ம ஶங்கராதிகள் அவனுடைய ஸங்கல்ப லேஶத்தால் உத்பவித்து மறைகிறார்கள். தன்னுடன் நித்யாநந்தத்தில் பங்கு கொண்டு வாழும் நித்யஸூரிகளை விட—பாவம்!—இந்த பூலோகத்தில் மானிடனை நேசிக்கிறான். மனித வர்க்கத்தில் அவன் வைக்கும் வாஞ்சை அளவற்றதாம். இந்த நன்றியற்ற மனிதனுக்காக எல்லையற்ற பெருமையுடைய அவன், 'தாம் தம் பெருமை அறியார்' என்று ஸூரிகள் களித்துப் பாடும்படி மனிதன் போலவே பிறந்து வளர்ந்தான். பெற்ற தென்ன? அவமானமும் திரஸ்காரமுமே. மனம் சோர்ந்தானா? ஸர்வ ஶக்தன் மனம் வைத்தால் இரண்டு விபூதியையும் ஒக்க அழித்துவிடலாமே! கருணாநிதியான கமலாஸகன் அங்ஙனம் செய்யவில்லை. விபவாவதாரத்தில் மனிதன் காட்டிய ஔதாஸீந்யத்தையும் மறந்து நாடெங்கிலும் அர்ச்சாவதாரமாய் பரவினான். குப்பத்திலும், சிறு சேரியிலும், க்ராமத்திலும், நகரத்திலும், ராஜதானிகளிலும் நின்றும் இருந்தும் கிடந்தும் பெற்ற தாயை மறந்து நன்றியற்ற மனிதனைக் கண் மூடாது கடைக் கணித்து அவன் ஸுகதுக்கங்களில்

" வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:கித: ।
உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி ॥ "

என்றபடி தானும் ஈடுபட்ட தயாளுவாய், அவனை உத்ஸாஹம் ஆறுதல் முதலிய க்ருபா கார்யங்களால் காப்பாற்றி ஸர்வ தர்ஶகனாய், ஸர்வ ஸாக்ஷி

யாய், ஸர்வ பந்துவாய், ஸர்வைகசரணனுய், ஸர்வ ரக்ஷகனுய்த் திகழ்கிருனென்பது எந்த ஸித்தாந்தத்தில் போய்க் காணலாம்? இப்படி ஸர்வோபகாரமும் செய்து அவன் நம்மிடம் விரும்புவது நம் ஹ்ருதயத்தை. மனப்பூர்வமான காதலே. மூச்சுக் காற்றுப்போல், உண்ணும், உணவுபோல் குடிக்கும் நீர்போல் அவனன்றி வாழ முடியாது என்னும் எண்ணமே அவன் நம்மிடமிருந்து எதிர் பார்ப்பது. விளையாட்டுப் பொம்மைகளை வாங்கிக்கொண்டு தாயை மறக்கும் குழந்தைகள்போல் நிலையற்ற இன்பங்கள் பின் சென்று நீலமாமுகில் வண்ணனை மறந்தான் மனிதன். இந்த நன்றியற்ற மனிதன் மனம் மாறித் தன்னை நினைக்கமாட்டானு என்று காத்திருக்கிருனும் கமலாஸகன். இப்படி அஸத்யம் நாஸ்திக்யம் க்ருதக்நதை காமம் முதலியவற்றில் முழுகிக் கிடக்கும் மனிதனிடம் ஏன் இந்த மாதவன் மால்கொண்டு திரிகிருன்? அவனுடைய குற்றங்களை மறந்து ஏன் க்ருபையால் அவனை மன்னிக்கிருன்? ஏன் அவனைத் தேடித் திரிகிருன் ?

வாசகர்களே! சேதந வர்க்கத்தின் பாபத்தையே மறக்கச் செய்ய வல்ல ஆழ்வார்களின் மன்ருட்டத்தினுல்தான். நம் சடகோபன் போன்ற அதிகாரியை வானவர் தானவர் மானவர் என்ற மக்களில் எங்கே காணலாம்? 'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலை யெல்லாம் கண்ணனெம் பெருமான்' என்ற திருவுள்ளப் பான்மையை எந்த உலகில் காணலாம்? 'அதஈச்சஸஹஸ்ராணாம் ரக்ஷஸாம் பீமகர்மணாம்'' என்ற வசநம் கேட்டு 'ஐயோ! என் ஐயன் ஏகாகியாக யுத்தம் செய்கிருனே!' என்று அலறி ஓடிய குலசேகரப் பெருமாளைப்போல் இன்னெருவரை எங்கே பார்ப்பது? தனக்கொன்றும் வேண்டாது மனம் குதூஹலித்து, "மாதவனே! நீ பல்லாண்டு வாழ்வாயாக! நின் திருமகள் வாழ்வாராக! நின் திவ்யாயுதங்கள் அடியவர்கள் வாழ்வார்களாக" என்று எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடிய ஸ்ரீ விஷ்ணுசித்தனைப்போல் எத்தனை பெயர்கள் இவ்வையகத்தில் உண்டு? உண்டு உடுத்துக் களித்துச் சுயநலத்தில் முழுகிக் கிடக்கும் உலக மக்களுக் கெதிரே, 'உண்பதும் பூண்பதும் உலக ரக்ஷகனுக்காக' என்றும் 'சேதநனும்சேதநனது செயல்களும் எல்லாம் வாஸுதேவனுக்காக' என்றும் நமது பாரார்த்யத்தை நிலை நாட்டிய பாவை ஆண்டாளுடன் சேர்த்து எண்ண இன்னெருவர் உண்டா? இப்பெருமாட்டியின் மனமார்ந்த தெய்வீகக் காதலில், பதினுன்கு உலக மக்களின் ஆர்த்த த்வநியும் விச்வாஸமும் த்வனிக்கின்றன. ஆண்டாள் வந்து உவந்து பிறந்த மானிட வர்க்கத்தை மாதவன் உபேக்ஷிப்பானு? 'யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ' என்றபடி ஒரு மனிதன் மாதா பிதா பத்நீ சிசு பந்து மித்ரர்களிடத்தில் வைக்கும் அன்பெல்லாம் ஒருங்கே புருஷோத்தமனிடம் வைத்தார் பரகாலன். இறைவனைக் கணமும் பிரிய ஸஹியார். தன்னை ஸர்வ விலக்ஷணமான அன்பை உடையவராகக் காட்டினுர். 'நும் அடியாரோடு ஒக்க நினைத்தீர் போலும்' என்று பிரணய கோபத்தில் சீறுவார். இவருடைய அன்பு வானத்திலும் பரந்தது; கடலிலும் ஆழ்ந்தது; வையகத்தை வாழ்விப்பது. இவருடைய 'வாடினேன்' என்ற ஆர்த்த த்வநியில் பதி

னான்கு உலகங்களின் வெந்துயர்க் குரலும் விம்மி அழுகையும் கேட்கிறதல்லவா! இவரது அன்பிற்கு இந்திராபதி என்ன கைம்மாறு செய்வான்! இப்படிப்பட்ட கருணாவதாரமான அர்ச்சாவதாரத்தை மனிதன் மறந்தான். நரகாவஹமான மறதி இது என்று சொல்லவேண்டுமோ? கோயிலுக்குப் போவதென்றால் வெட்கம்; கும்பிடுவதென்றால் வெட்கம்; கோவிந்தா என்றால் வெட்கம்; இது ஒரு பெரிய விஷநோய். நம் இளைஞர்களுக்கு நாஸ்திகத்தையும் அதனால் ஸர்வ நாஶத்தையும் உண்டுபண்ணும் பயங்கரமான நோய். பெரியோர்கள் அர்ச்சாவதாரத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கவேண்டும். படித்து ஆழ்வார்களின் மஹிமையில் ஈடுபட்ட உத்தமர்கள் நாடெங்கிலும் சுற்றி இந்த நற்சரித்ரங்களைப் புகட்டவேண்டும். ப்ரசார மின்றிப் பல மேது? ப்ரசார மின்றி வாழ்வேது? ப்ரசார மின்றி ஸத்ய மேது? ப்ரசார மின்றி நம் ரக்ஷகமான ஸித்தாந்தத்தின் விலை யுயர்ந்த தத்வங்கள் எல்லாருள்ளத்தையும் எப்படி அடைய முடியும்?

ஒரு காலத்தில் ஔஷதத்தின் பெருமையை அறிந்திருந்தார்கள் மக்கள். வைத்யர்களின் உயர்வையும் அறிந்திருந்தனர். நோயின் கொடுமையையும் நன்கு தெரிந்துகொண்டிருந்தார்கள். ஔஷதசாலை பூட்டப்பட்டிருந்தாலும் ஓடி ஆரவாரித்து இடித்துக் கதவு திறக்கப்பெற்று மருந்துண்டு வாழ்வு பெற்றனர். இந்தக் காலம் அது அல்ல. நோயையும் சுட்டிக் காட்டி கையிலும் மருந்தை வைத்துக்கொண்டு வைத்யன் ஊரூராய் அலையவேண்டும். ப்ரசார மின்றேல் வாழ்வில்லை. ப்ரசாரத்தில் வெட்கமேன்? அர்ச்சையைத் தொழுவதை நிமிர்ந்த தலையுடன் நேரான மனிதர் செய்யும் செயலாகக் காட்டவேண்டும். அர்ச்சாவதார நம்பிக்கையை வாழ்க்கையின் அடிப்பட்ட நம்பிக்கையாக எடுத்துக் காட்டவேண்டும். தலைகுனிய வெட்கமாய்த் தான் இருக்கும். கைகுவிக்க வெட்கமாய்த்தான் இருக்கும். இந்த வெட்க மனப்பான்மை போகவேண்டும். ப்ரசாரம்தான் இதை ஸாதிக்க வல்லது.

பல வருஷங்களுக்குமுன் ஒரு கிரிஸ்தவப் பாதிரியாருடன் வீதியில் நடந்துகொண்டிருந்தேன். ப்ரஸித்தமான திருக்கோயில் ஒன்றைக் கடந்து செல்ல நேரிட்டது. அறிந்த பிராயம் முதல் அஞ்சலி யில்லாமல் திருக்கோயில்களைத் தாண்டியதில்லை. கூட இருந்தவர் ஒரு மேனாட்டவ ராகையால், அவருக்கு முன்னர் இந்தச் செயலைச் செய்ய வெட்கங்கொண்டு, தடிமரம்போல் வணங்காமலே சென்றேன். இறைவன் கருணையுடன் நமக்கு என்ன நற்புத்தி புகட்டுகிறான் பாருங்கள். அரை மைல் தூரம் சென்ற வுடன் ஒரு கிரிஸ்தவ மடத்திற்கு உட்செல்லும் அப்பாதிரி, நான் பக்கத்தில் நிற்கையால் என்னுடன் பேசிவந்த பேச்சைச் சட்டென நிறுத்தித் தன் தலைத் தொப்பியைக் கழற்றி, ஸெயின்ட் பிலமீனா எனும் ஒரு ப்ரதிமையின் முன் மண்டியிட்டு ஏதோ ஜபித்துப் பிறகு என்னை அழைத்து முன் போல் பேசிக்கொண்டு சென்றார்.

வாசகர்களே! நம் இளைஞர்களின் மனப்பான்மை என்னுடையது போலவே. க்ரிஸ்தவன் தன் வணக்கத்தில் வெட்கப்படுகிறானா? மகமதியன்

வெட்கப்படுகிருன்? நம் வைஷ்ணவன் ஏன் வெட்கப்படவேண்டும்? திவ்யால யங்களில் இருக்கும்பொழுதோ, திவ்யமங்கள விக்ரஹங்களுடன் கூட அநு யாத்ரையாக வரும்பொழுதோ திவ்யோத்ஸவங்களில் பல பணிகளில் ஈடுபடும் பொழுதோ, அதை நம் வாழ்வின் ஸுவர்ண நேரமாகக் கருதாமல் அவ மானமாகக் கருதுபவரும் உண்டு. இந்தக் கோழைத்தனம் நம்மிடத்திலிருந்து நீங்கவேண்டும்.

அன்பர்களே! மேனுட்டுப் பாதிரிகளைப் பாருங்கள்! ஒரு மதப் பெரியாரின் விசேஷ நாள் வந்தால், அவரது திருவுருவத்தைப் புறப்பாடு செய் வித்துப் பின் செல்கிருர்கள். அதில் கலந்துகொள்வதில் வெட்கப்படுவதில்லை. ஸமீபத்தில் 'பாதிமா' என்ற ஸ்பெயின் தேசத்துக் கிராமத்தில் அற்புதங் கள் நிகழ்த்தியதாக ஒரு கன்னி மேரியின் ப்ரதிமையைக் கடல் மலை நாடு கடந்து உலக பவனியாக எடுத்துவரும் பாதிரிமார்களைப் பார்த்த பிறகேனும் ஸ்ரீ வைஷ்ணவர் என்று சொல்லிக்கொள்ளும் நமக்கு அர்ச்சாவதார ருசி யாவது அல்லது அதில் அவமான மின்மையாவது உண்டாகக்கூடாதா என்று வணக்கத்துடன் கேட்கிறேன்.

அர்ச்சாவதாரத்தில் எம்பெருமான் மனிதனுக்காகப் பாடுபட்டுச் செய்த அற்புதங்கள் ஒன்றல்ல. கோடி. கொதிக்கும் நீரைக் குடிப்பதும், மண்ணை ம்ருஷ்டாந்ந மென்று உண்பதும், அன்புப் பாடல்களுக்குத் தலை அசக்கி ஆமோதிப்பதும், கிழக்கு நின்றவன் மேற்கு நிற்பதும், ஆயுதங்களை விடுவதும் ஏற்பதும், படுத்தவன் எழுவதும், எழுந்தவன் படுப்பதும், இப்படி யாக அவனுடைய தாயினு மினிய கருணையை நன்கறிந்தவர் ஒரு சிலரே. இந்தத் தனித் தாயை நமக்குத் தந்தருளிய ஆழ்வார்களை விட நமக்கு உற்ற துணைவர் யாவர்? அடுத்த இதழ் முதல் சில திவ்யதேச விசேஷங்களைக் கவனிப்போம்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ ஸ்வர்ணம் ஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

இந்தப் பாரத பூமியில் ஜ்ஞாநம் அநுஷ்டாநம் வைராக்யம் முதலிய ஸதாசார்ய குணங்களை யுடைய ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்து ஆசார்யர்களுக்குள் ப்ரதாநதமராய் ஸர்வ லோக விக்யாதராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீ ஸ்வர்ணம் ஸ்வாமியி னுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஷை ஸ்வாமியின் திருவடி ஸம்பந்தம் பெற்றவர் களுக்குள் ப்ரதாநராய் ஸ்ரீரங்கம் வடக்கு உள் திருவீதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தான வித்வான் தேசிகதர்சந விஜயத்வஜர் புத்தன்கோட்டகம் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி திருமாளிகையில், நாளது விக்ருதிவூ வைகாசிமீ 27உ-யில், ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸகல கல்யாண குணாலங்க்ருதராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமநத்தை அநுஸரித்து ஆரம்பிக்கப்பட்டு, ஷை 28-ம் தேதி ரேவதீ திருநக்ஷத்ரத்தில் முடிவு பெற்றது. இரண்டு தினங்களிலும் ஸ்ரீரங்க

வாஸிகளான ஸகல வைதிக ஸ்ரீவைஷ்ணவர்களினால் வேதபாராயணம் திவ்யப்ரபந்தங்கள் ஸ்ரீமத் ராமாயண பாரத பாகவதாதிகள் ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்த சதுஷ்டயங்கள், இவைகளுடைய பாராயணங்கள் அநுஷ்டிக்கப்பட்டன.

திவான் பஹதூர் ரிடையர்ட் ஜட்ஜ் ராகவையங்கார், கஸ்டம்ஸ் ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலான ப்ரபுக்களும் அநேகம் வித்வான்களும் வைதிகர்களும் எழுந்தருளியிருந்தார்கள். வைகாசிமீ 28உ காலையில் ஷை க்ரந்தங்களினுடைய சாற்றுமறையும், பெரிய பெருமாள் தொடங்கி ஆசார்ய ஸம்பாவனைகளும், ஷை ஸ்வாமிகளுக்கும் ஸம்பாவனையும், பக்ஷ்ய போஜ்ய வர்க்கங்களோடு ததீயாராதநமும் பண்ணப்பட்டன ‘ [illegible] ’—என்கிற பகவத் வாக்யத்தின்படியே கலியுக தோஷ நாசகமான மஹாசார்யனுடைய கைங்கர்யத்தில் யதாதிகாரம் அந்வயித்த ஸ்ரீரங்க வாஸிகளான ஸ்ரீ வைஷ்ணவர்கள் க்ருதார்த்தரானார்கள்.

வாஸுதேவாசார்யர்.

* * * * * * *

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸபா, பம்பாய்

ஒரே மாத காலத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ கடாக்ஷத்திற்குப் பாத்ரமான 105-அங்கத்தினர்கள் சேர்ந்த ஷை ஸபையின் ஆதரவில் ஸ்தோத்ர பாட வகுப்பும், உபநிஷத் வகுப்பும் தொடங்கப்பட்டு, ஸ்ரீ. உ.ப. காஞ்சீபுரம் நரஸிம்ஹாசாரிய ஸ்வாமியால் 2—6—50 முதல் ஸ்ரீ ஸ்துதியும், ஸ்ரீ. உ.ப. மன்னார்குடி கருபாடி ராமானுஜாசார்ய ஸ்வாமியால் 4—6—50 முதல் ஸந்த்யாவந்தநமும், ஸ்ரீ. உ.ப. M. R. ஐயங்கார் க்ருஹத்தில் (நெ. 3, விநோத் வில்லா, ஸ்டேஷன் ரோட், மாதுங்கா) இலவசமாகப் போதிக்கப்பட்டு வருகின்றன. கூடிய சீக்ரத்தில் கீதை, நாலாயிர திவ்ய ப்ரபந்தம், ஸ்ரீ தேசிக ப்ரபந்தம் முதலிய ஸம்ப்ரதாய க்ரந்தங்களும் போதிக்கப்படும். எல்லோரும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து, ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்திற்குப் பெருமை உண்டாக்கும்படி ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறோம்.

M. V. வரதாச்சாரி
V. ராகவன்
[செயலாளர்கள்]

* * * *

ஸ்ரீமந் நாதமுனிகளின் ஆச்ரமம்

‘ரங்கநாதன்’ என்கிற திருநாமத்தின் ஏகதேசத்தை யிட்டு ‘நாதன்’ என்றும், யோக நிஷ்டரானமையைப் பற்றி ‘முநி’ என்று உபபதம் சேர்த்தும் இவ்வாசார்யனை ‘நாதமுநி’ என்பதாக வழங்கி வருவது ஸுப்ரஸித்தம். நமது விசிஷ்டாத்வைத தர்சநத்திற்குப் பாதம ப்ரவர்த்தகரான இவ்வாச்சார்யனுடைய வைபவத்தைக் குருபரம்பரா க்ரந்தங்களில் ஸேவிக்குமிடத்தில் க்ருஹஸ்தாச்ரமத்திலேயே இவ்வாச்சார்யன் எழுந்தருளியிருந்ததாக ஆபாத ரீதியில் தோன்றுகிறது. திவ்ய தேசங்களில் அர்ச்சா ரூபத்திலும் அப்படியே ஸேவை ஸாதித்து வருவதும் அதை ஊர்ஜிதம் செய்கின்றது.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன், சத தூஷணியில், ‘அலேபக மத பங்கம்’ என்னும் 65-வது வாதத்தில் ஸ்ரீமந் நாதமுனிகளைத் துரீயாச்ரம நிஷ்டராக

“[illegible] .... [illegible]”

என்று உதாஹரணம் செய்தருளுகிருர். இதிஹாஸ புராணுதிகளில் சொல்லியபடி 'காஷாயம் தண்டம் சிகை இவைகளைத் தரிக்கின்ற பகவந் நாதமுநி முதலியவர்களை அவித்வான்கள் என்னலாகுமோ ?' என்பதாக, ப்ரதிபக்ஷியின் ஆக்ஷேபத்திற்கு ப்ரத்யுத்தர மிங்கு அருளியபடி. இதற்கு முன் வாதத்திலும், 'யதிகளுக்கு ப்ரஹ்ம ஸூத்ர பரித்யாகமானது, பாஸ்கராசார்யர், யாதவ ப்ரகாசர், பகவந் நாதமுநி முதலியவர் பின்பற்றிய தன்று' என்று காண்கிறது.

ஸ்ரீ பிள்ளைலோகம் ஜீயர் அருளிய தனியன் வ்யாக்யாநத்தில் இவ்விஷயம் மிகத் தெளிவாகவே யுள்ளது. 'நாத யாமுந யதீந்த்ரான்' என்று நாத யாமுநர்கள் நாதமுனிகளும் யாமுந முநிகளும் ; அவர்கள் தான் பரமஹம்ஸரிறே ; நாத யாமுநர் போல்வாரை அன்னம் என்றும் என்றிறே ஆசார்ய ஹ்ருதயத்தில் அருளிச்செய்தது. அவரும் அன்னமாயிறே அருமறைகளை யருளிச்செய்தது" என்பதாக. ஆலயங்களில் பூர்வாச்ரமத்தை யிட்டு ப்ரதிஷ்டை செய்து ஆராதித்தலும் ப்ரமாணிகமே. ஸ்ரீ மதுராந்தக க்ஷேத்ரத்திலே ஸ்ரீ பாஷ்யகாரர் க்ருஹஸ்த்தாச்ரமத்தில் பஞ்சஸம்ஸ்காரம் பெற்றமையால் அவ்வாச்ரமத்தோடு அந்தத் திவ்ய தேசத்தில் அர்ச்சா ரூபியாய் ஸேவை ஸாதித்து வருவதுபோல், ஸ்ரீமந் நாதமுனிகளும் பூர்வாச்ரமத் திருமேனியோடு ஸேவை ஸாதிப்பது கொண்டு ஆச்ரமாந்தர ஸ்வீகார மிவருக்கு இல்லை என்ன வொண்ணுது. குருபரம்பரைகளிலும் 'இவர் யோக நிஷ்டர்' என்பதால் ஔசித்யத்தை யிட்டுப் பரமஹம்ஸாச்ரமமும் விவக்ஷித மெனக் கொள்ளலாம். சததூஷணியிலும் தநியன் வ்யாக்யாநத்திலும் ஆசார்யர்கள் கண்டோக்தியே நமக்கு ப்ரமாணதம மன்ரே ?

தி. ஈ. வீரராகவாசார்யர்.

[மதுராந்தகம்]

* * * *

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் அவதாரமும் ஸீதா கல்யாணமும்

முக்கூர் அக்ரஹாரத்தில் 19—6—50 முதல் 24—6—50 வரையில் ப்ரதிதினம் இரவு 7-30 மணி முதல் 10- மணி வரையில், மதுராந்தகம் ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்கிருத கலாசாலை உபாத்யக்ஷர் ஸ்ரீ. உ. வே. முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, கம்ப ராமாயணத்தில் 'ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் அவதாரமும் ஸீதா கல்யாணமும்' என்ற விஷயத்தைப்பற்றி வெகு அழகாக உபந்யஸித்தார். அந்த ஸ்வாமி தமிழில் ஸ்வல்ப காலத்தில் விரைவில் தேர்ச்சிபெற்று நன்ருக உபந்யஸித்ததை ஸ்ரீ. உ. வே. ப்ரஹ்மதேசம் தூப்புல் வித்வான் நரஸிம்ஹாசார்யர் முதலியவர்கள் மிகவும் கொண்டாடினர்.

M. S. நாராயணன்.

* * * *

'ஆஸ்திக்யம்' என்னும் வ்யாஸத்தைப்பற்றி

ப்ரஹ்மஸ்ரீ நடேச சாஸ்த்ரிகளின் கடிதம்

சென்ற ஸஞ்சிகையில் வெளிவந்த 'ஆஸ்திக்யம்' என்னும் வ்யாஸத்தைப்பற்றி நமக்குப் பல அன்பர்கள் ப்ரசம்ஸித்து எழுதியுள்ளார்கள். அப்படி வந்த கடிதங்களில் ப்ரஹ்ம ஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்த்ரிகள் அவர்களின் கடிதத்தைக் கீழே ப்ரசுரித்திருக்கிரோம். ஸ்ரீ சாஸ்த்ரிகளைப் போலவே மற்றும் பல ரஸிகர்கள் அபிப்ராயப்படுகின்றனர். ஷை வ்யாஸம் ஸ்ரீ. உப. வித்வான் தேசிக தர்சந விஜயத்வஜர் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி செய்தருளிய உபந்யாஸத்தின் சுருக்கம். அதை டில்லியிலுள்ள நமது அன்பர் ஸ்ரீ. S. M. க்ருஷ்ணமாசாரியர் தொகுத்து எழுதியபடி ப்ரசுரித்திருந்தோம். இப்பால் பல நண்பர்களின் விருப்பப்படி ஷை வ்யாஸத்தை அதிலுள்ள ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்குத் தெளிவான அர்த்தத்துடன் விரிவாக எழுதியனுப்ப

வேணு மென்ற நமது ப்ரார்த்தனையை ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி க்ருபையுடன் அங்கீகரித்து அந்தப்படி எழுதி யனுப்புவதாக ஸாதித்திருக்கிறார். கூடிய சீக்கரத்தில் ஷை வ்யாஸம் வெளிவரும்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ சாஸ்த்ரிகளின் கடிதம்

17, நடேசய்யர் தெரு,
தி. நகர், சென்னை, 17.
17—6—50.

ஸ்ரீ. P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர் அவர்களுக்குக் கடலங்குடி நடேச சாஸ்த்ரிகள் எழுதுவது:—தாங்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியைக்கு ஸம்பாதகராக வந்தது முதல் வெளிவரும் ஒவ்வொரு வ்யாஸத்தையும் தவருமல் படிக்கிறேன். மஹர்ஷி ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமிகள் வஹித்த ஸ்தாநத்துக்குத் தாங்கள் முற்றிலும் தகுதி யுடையவர்களென வெண்ணி மஹத்தான ஸந்தோஷத்தை அடைந்தவனாக இருக்கிறேன். ஸர்வேச்வரனும், பக்த பக்ஷ பாதியும், சாச்வத தர்ம கோப்தாவுமான என் ஆண்டவன் ஸ்ரீ ராதா காந்தன் தங்களுக்கு ஸர்வ மங்களங்களையும் தருவாராக.

நிற்க: ஆனி மாத வெளியீடான ந்ருஸிம்ஹ ப்ரியாவில் 'ஆஸ்திக்யம்' என்ற தலைப்பின் கீழ் வெளியாகும் வ்யாஸத்தி லுள்ள ச்லோகங்கள் யாவையும் தேவநாகர லிபியில் அச்சிட்டு, விரிவான பதவுரை கருத்துரைகளையும் சேர்த்து, டிம்மி 16 பேஜில் தனியாக அச்சிட்டு புஸ்தக வடிவத்தில் குறைந்தது 5000 காபிகள் வரை வெளிப்படுத்த வேண்டுகிறேன். அப்படி வெளிவரவேண்டிய வ்யாஸ மிது. ஸந்தேஹ மில்லை. வெகு தெளிவாயும் யாவர் மனத்திலும் நன்கு தைக்கும்படியும் ஷை வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது. வ்யாஸாசார்யர் அவர்களே நேரில் வந்து உபதேசிப்பது போலிருக்கிறது. இந்த வ்யாஸம் உலகில் பரவினால் நாஸ்திக்யம் அடியோடு மறைந்து ஆஸ்திக்யம் தழைத்தோங்கு மென்பதில் சற்றும் ஐயமில்லை. ஆகவே தாங்கள் கூடுமானால் அவ்விதமே செய்து, உலகில் ஆஸ்திக்யத்தை நிலைக்கச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னாண்டவன் ஸ்ரீ ராதா காந்தன் அதற்கு வேண்டிய ஸௌகர்யங்களை அளிப்பாராக.

கடலங்குடி நடேச சாஸ்த்ரிகள்.

* * * *

ஸ்ரீ ராம காநாம்ருத ஸமர்ப்பணோத்ஸவம்

சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில், 2—7—50 ஞாயிற்றுக்கிழமை ச்ரவணத்தன்று ஒரு ஸதஸ்கூடி ஷை நூலின் ஸமர்ப்பணோத்ஸவம் நடந்தேறியது. ஸ்ரீ திருவேங்கட முடையான், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் முதலிய எம்பெருமான்கள் எழுந்தருளி யிருந்த அத் திருவோலக்கத்தில் தேசிக ரத்ந தீபம் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி தலைமையில் இந்நூல் அரங்கேற்றப்பட்டு, ஸ்ரீ அக்ராஸநர்க்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. ஷை நூலை இயற்றிய ஸ்ரீமான் S. V. ராமஸ்வாமி ஐயங்கார் ஸகுடும்பமாய் அதை ஸங்கீத ப்ரவசநம் செய்தார். பகவான் வால்மீகியின் க்ருதியையும், கவிச் சக்ரவர்த்தி கம்ப நாடரின் கவிதையையும் தழுவி அமைந்த இக்காவ்யம், அதி ஸரளமான ரசனையுடன் ஆபால வ்ருத்தாள் அப்யஸிக்கும்படி அமைந்துள்ள தென்பதை அந்த ஸபையில் ப்ரஸந்நராயிருந்த வித்வான் ஸ்ரீ. உப. வே. அநந்தாசார்யஸ்வாமி தமது முடிவுரையில் வ்யக்தமாக விளக்கினார். பின்னர் அக்ராஸநர், இக்காவ்யம் அமைந்துள்ள ரீதியையும், அதைப் பாடின கானத்தின் இனிமையையும் பாராட்டி ஸாஹித்ய கௌரவமும் ஸங்கீத இனிமையும் ஒருங்கே பொருந்தியுள்ள இந்நூல் இன்றைச் சூழ் நிலையில் மாந்தர் யாவரும் ஓதி உணர்தற் குரிய தென்று கூறினார். மற்றும் இந்த ஸுந்தர காண்டத்தைப் போலவே மற்றைக் காண்டங்களையும் இயற்றவல்ல பகவநநுக்ரஹத்தையும் ப்ரார்த்தித்தார். இத்

தகைய ஊக்கத்தை இவ்வாசிரியர்க்கு உடனிருந்து ஊட்டி, இந்நூலைப் பார்வையிட்டுப் பரிசோதித்து வெளியிட்ட டீச்சர்ஸ் காலேஜ் ரிடையர்ட் தமிழாசிரியர் ஸ்ரீ. உப. K. ஸுதர்சனாசார்ய ஸ்வாமியின் உதவியைப் பாராட்டிப் பேசினார். இந்த ஸதஸ்ஸில் இந்நூலை இசையுடன் பாடி மகிழ்வூட்டின தம்பதிகளுக்கு ராமாயண கலாமணிகள் என்ற பிருது வழங்கப்பட்டது.

D. S. ராகவன்,
(Editorial Staff, 'The Hindu', Madras)

* * * *

ஸ்ரீ. உப. ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமியின் ஆப்திகம்

மஹர்ஷி ஸ்ரீ. உ.ப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி விரோதி௵ மிதுன க்ருஷ்ண பஞ்சமி யன்று 15—7—50) பரமபதித்த விஷயம் நமது ஸுஹ்ருத்துக்கள் அறிவர். அந்த ஸ்வாமியின் ஆப்திகம், நிகழும் விக்ருதி௵ ஆனி௴ 20௳ (4—7—50) செவ்வாய்க் கிழமை யன்று, மாம்பலத்தில் ஸ்ரீ ஸ்வாமி திருமாளிகையில் விசேஷமாய் நடந்தேறியது. இது ஸம்பந்தமாக, 5-நாள் முன்னதாக அத்யாபக–வேதபாராயணங்களும் க்ரந்த சதுஷ்டயங்களும் பாராயணம் உபக்ரமிக்கப்பட்டு, செவ்வாய்க்கிழமை சாத்துமறை விசேஷமாக நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமியின் சிஷ்ய கோடிகளும் ஸுஹ்ருத்துக் களும் பந்து வர்க்கங்களும் உடனிருந்து இதைச் செவ்வனே நடத்தி வைத்தனர்.

ஸ்ரீ ஸ்வாமியின் பரமபத ப்ராப்தி ஞாபகார்த்தமாக, மாம்பலம் ஸ்ரீ ராமக்ருஷ்ண மிஷன் கலாசாலாசிரியர்கள், தங்கள் கலாசாலையில் அன்று ஒரு சங்கம் கூடி. ஸ்ரீ ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்களைப் பரக்கப் பேசி அநுஸந்தித்தனர்.

ஸுதர்சன தாஸன்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு 1950௵ ஜூன்௴

சந்தா நெ.	பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை ரூ.
34	ஸ்ரீ. A. ஸ்ரீனிவாஸராகவ ஐயங்கார், ஸ்ரீரங்கம்	50	3
61	,, L. ஸ்ரீராமாச்சாரியார், வக்கீல், ஆரணி	50	3
135	,, T. மாணிக்க நாயகர், சேலம்	49	3
146	,, N. நரஸிம்ம ஐயங்கார், ஹைதராபாத்	51 to 53	10
161	,, S. திருவேங்கடாச்சாரி, எழும்பூர்	50	3
173	,, K. கோபால ஐயங்கார், பரமக்குடி	49, 50	6
205	,, K. வெங்கடாச்சாரியார், ஈரோடு	50	3
321	,, R. வரதாச்சாரியர், சைதாப்பேட்டை	50	3
697	,, N. A. சிங்காரம்மாள், சைதாப்பேட்டை	49, 59	6
795	,, T. துரைஸ்வாமி ஐயங்கார், ஒலக்கூர்	50	1–8
811	,, K. N. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், திருப்பத்தூர்	50	3
831	,, S. ரங்கஸ்வாமி ஐயங்கார், டில்லி	48 to 50	9
984	,, L. R. ராஜகோபால ஐயங்கார், சேலம்	49, 50	6
996	,, V. S. நாராயணன், செங்கலை	50	3
998	,, L. ராஜகோபாலன், கும்பகோணம்	50	3
1015	,, T. S. ராகவாச்சாரியார், டில்லி	50	3
1016	,, K. S. சேஷாத்ரி ஐயங்கார், திப்பரமஹாதேவி	50	3
		ஆக ரூபாய்	71—8

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

22 யஸ்யாஸ்ஸமயே விஹாரம் நிஶி நிஶி பஜதாம் ஶ்ரீஜனானாம் ப்ரபாபா
ந்த்வீநேக்ஷ்யகோபி அந்த: கிம் ந விஜயதே தாத்ருஶோ ஸம்பவோ(அ)பி ।
ஶ்ரீஹர்ஷோத்கம் ப்ரத்யதிஷ்டா பரமபதகதோ தேஹரண
ஸோ(அ)யம் ஸர்வஜ்ஞ: ஸுதீஜனைர் ஜ்யோதிஷ்மான் நிர்மல: ॥

23 ஸமயே யத்ர தத்ர தத்ஸம்ஸ்மரண ஸ்ருதிஶிரோ நானாவிதை:
ஸ்ரீநாராயணம் ஸகலகல்யாணகுணை: வாரிணி வாத்ஸல்ய பரமகம் ।
தத்ராகத்ய ஸம்ப்ரபத்ய: ப்ருதிவீ தலம் வீதா ஹ்ருஶம் த்ருவீ ஶ்ரா:
வாராணஸீம் ப்ராப்ய ஸர்வம் ஹ்ருத்யஸம்ஸ்தம் ஸமத்ரதனா ஸத்யஸங்கல்ப: ॥

24 யஸ்யாம் ஸாங்யம் கபிலமுனிவத் தாபஸ்தப்தவேஷ ப்ரயாதே
தீவ்ரா வீதி ப்ரஹ்ம நிரவதிம் தம் ஶரண்யம் ஹ்ருத்யவேதாக: ।
வஸ்த்ராத்யாதேய ஸர்வாணி விஸ்ரமையேஷ்டாஹிதா நித்யஸம்பாத்
ஶ்ருத்வா தத்த்வ தத்த்வம் நிர்யயாஸ்ஸாரிகாஸ்வம் ஶிரஸி ॥ (ஸாரிகாஸ்வம்வதே)

25 வேதே வேதாங்கஹாரே விஶத மதியதா: யத்த்வயத்னாஸ்து தகேத
தீவ்ரா ஸாஹித்யவாயிவம் ஸகலஜனதா: களஸம்ஸ்தாவாணி நீயே ।
தந்த்ரே தத்ஸ்வார்த்த ஸம்ஸ்பூர்த்தி ஶ்ருதிஶிரஸி ஸதா ஶ்ராவ்ய ஸஞ்சித்தா:
கலஸ்தா நிஷ்டா நிஷ்டா யஸ்ய நிரவதா யத்ர ஹர்ஷாஸ்வஸந்தி ॥

26 ஶய்யாம் த்யக்த்வா ப்ரஹாதே ஹரிமய ஹ்ருதயே த்யாயித்வா அத த்வா
ஸ்னானம் நித்யானி கர்மாண்யபி நவநாயகம் த்வயம் வயம் நவங்கா: ।
ஸ்னானாந்தே ஸந்த்யாம் ஸ்வேஶம் யஸ்மாணிமந்தவாஸ்தோஷ்ஜ்யயா வரஜயங்க:
யஸ்யாம் காஸ்வயோகி ஸ்ருதிஶிரஸி வத்ஸரா நா வஸந்தி ॥

27 யஸ்யாம் வாயுபும் யமணீம் ஸர்வயே நித்ய நித்யே ஸத்தததனே
வதேஹய ப்ரஜாஸ் ஜலத நிவஹா நா நவோஸகஸ்யங்க: ।
ந்ருத்தாரம்ஹே நட நவோத நே ஸமூர்த்தா நாம் ஹதா நாம்
ஶப்தா ந த்வா வ நவ நாரவாஸ் பஹிஷ்ஷஸ்ஸ்வந்தி ஹர்ஷா: ॥

28 ஸதாம் வரீம் யோகஸூத்ர ஶ்ரணய: ஸஹ்ய: வரீ தஸ்ஸகஸ்யாஹிவாக்ய: ।
ஸ்ரஸ்ஸ்வகீயே ஹ்ருதயே த்விவாத்ரி நாயம் நராஹ ஸமஹிதம் ப்ரவேதே ॥

29 ஶ்ரீத்வாஜ்யேனாம் ஶஸநம் த்விஜேந்த்ரா: ஹஸ்த்யத்ரி நாயாமயயஸ புவா தத்யா: ।
ஶஜாத்ரிஹிவஸ்ரீவடாந ஶ்ரஹீஶ்வா ப்ரத்யத்ர தா: வளஜனைஸ்ஸமஸ்தை: ॥

30 [illegible]
[illegible]

31 [illegible]
[illegible]

32 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

33 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

34 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

35 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

36 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

37 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

38 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

39 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

வந மஹோத்ஸவம்

நிகழும் ஜுலை மாதம் முதலாவது வாரத்தை நம் பாரத தேசமெங்கும் 'வந மஹோத்ஸவ' வாரமாக அரசாங்கத்தார் கொண்டாடினர். அந்த வாரத்தில் தேசமெங்கும் பல்லாயிரக் கணக்கான செடிகள் வைக்கப்பட்டன. யுத்தம் காரணமாகவும் அதிகப்பணம் ஸம்பாதிக்க வேண்டு மென்ற பேராசை காரணமாகவும் சென்ற சில வருஷங்களாகக் காடுகள் பெருவாரியாக அழிக்கப்பட்டும், க்ராமங்களிலுள்ள வ்ருக்ஷங்களும் அமிதமாக வெட்டப்பட்டும் போயின. அம்மாதிரி மரங்கள் குறைந்து போனது இப்போது நம் நாட்டிலிருக்கும் அநாவ்ருஷ்டிக்குக் காரண மென்று பௌதிக சாஸ்த்ர நிபுணர்கள் அபிப்ராயப் பட்டதால் வ்ருக்ஷங்களை அதிகமாக வளர்ப்பதையும் உணவு உத்பத்தியை அதிகமாக்குவதற்கு வேண்டிய உபாயங்களி லொன்றாக எண்ணி அப்படிச் செய்யும்படி ஜநங்களுக்குப் பிரசாரம் செய்ய மந்த்ரிகளும் அரசாங்க அதிகாரிகளும் இப்போது முற்பட்டிருக்கின்றனர். மத்ய அரசாங்க உணவு மந்த்ரியான ஸ்ரீமான் முன்ஷி மரங்களை வைத்து வளர்ப்பது நம் தேசத்தில் ஒரு பெரிய தர்மமாகக் கருதப் பட்டு வந்திருக்கிற தென்றும், சில மரங்களை தெய்வாம்ச முள்ளவையாகக் கொண்டாடி வருகிறோ மென்றும், மரங்களால் நாம் பலவித ப்ரயோஜநங்களை அடைகிறோ மென்றும், ஆகையால் மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டு மென்றும் ஆங்காங்கு உபந்யாஸம் செய்துவருகிறார். இப்படிப் புதிதாகத் தோன்றி யிருக்கும் ஊக்கம் சீக்கிரத்தில் மறைந்து விடாமல், வைக்கப்பட்ட மரங்கள் ஸரியானபடி பராமரிக்கப்பட்டு செழித்து வளரவேண்டிய கார்யங்களை அரசாங்கத்தார் செய்ய ஆரம்பிப்பார்களாம்.

மந்த்ரி ஸ்ரீமான் முன்ஷி சொல்லியபடி பல வ்ருக்ஷங்கள், அரசு, வேம்பு முதலிய வ்ருக்ஷங்கள், துளஸீ முதலிய செடிகள். இவைகளை வைத்துப் பயிராக்குவதும், ஆராமங்கள், உத்யாநங்கள் இவற்றை அமைப்பதும், கோஸம்ரக்ஷணம் செய்வதும் நம் முன்னோர்களால் சிறந்த தர்மமாகக் கருதப்பட்டு அனுஷ்டிக்கப்

பட்டுவந்தன. அதனால் இம்மையிலும் மறுமையிலும் ஜனங்கள் நன்மைகளை அடைந்தனர். அவச்யமில்லாமல் மரங்களை வெட்டுவதும் உத்யானம், ஆராமம் இவைகளை அழிப்பதும் பாபமென்று தர்ம சாஸ்த்ரங்களும் புராணங்களும் கூறுகின்றன. நம் சாஸ்த்ரங்களை அரசாங்கத்தாரும் ஜனங்களும் நம்பி இந்த வன ஸம்ரக்ஷணத்தை முன்பே செய்ய ஆரம்பித்திருந்தால் காடுகள் அழிக்கப்படாமலிருந்து இப்போது லோகத்திற்குத் துன்பம் கொடுக்கும் மழைக் குறைவு ஏற்பட்டிருக்காதன்றோ! காடுகள் மழை பெய்வதற்குப் பெரிதும் அநுகூலமாயிருக்கின்றன என்று இப்போது விஜ்ஞானிகள் சொல்லும் வார்த்தையில் அரசாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் நம்பிக்கை ஏற்படுகிறது. மரங்களையும் உத்யானங்களையும் வளர்ப்பது தர்மமென்றும் அவைகளை அழிப்பது பாபமென்றும் சொல்லும் சாஸ்த்ரங்களில் நம்பிக்கை ஏற்படவில்லை.

* * * * * * * * *

சாஸ்த்ரங்கள் நாம் செய்யவேண்டியதாக விதித்திருக்கும் தர்மங்கள் நமது நன்மைக்கு என்றும், செய்யக்கூடாதென்று தடுத்திருக்கும் கார்யங்கள் நமக்குக் கெடுதலை உண்டு பண்ணக்கூடியவையென்றும், நம்பிக்கை இருந்தால் தான் க்ஷேமமுண்டு. பௌதிக சாஸ்த்ர நிபுணர்கள் பல ஆராய்ச்சிகளைச்செய்து அதன் முடிவுகளைச் சொல்லுவதால் அவர்கள் ஆப்தர்கள் என்ற எண்ணம் உண்டாகிறது. அவர்களைப்போலவே—அவர்களைவிட—நம் சாஸ்த்ரங்களும் அவைகளை நமக்குத் தந்த ரிஷிகளும் ஆப்தர்கள் என்ற உறுதி உண்டாகவேண்டும். நம் க்ஷேமத்தில் அக்கரையுள்ள தாய் தமப்பன்மார்களைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு பரிவுடன் சாஸ்த்ரங்கள் 'இதைச் செய்,' 'இதைச் செய்யாதே' என்று நமக்கு உபதேசிக்கின்றன. நம்மைக் கெடுப்பதற்காக அவைகள் அப்படிச் சொல்லவில்லை. நாம் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்டிருக்கும் தர்மங்கள் எப்படி நன்மையை உண்டாக்குகின்றன வென்பதை இக்காலத்து பௌதிக சாஸ்த்ர ரீதியில் பரிசோதனைகள் மூலம் எப்படி நிரூபிப்பதென்பது நமது சாஸ்த்ரங்களில் சொல்லப்படவில்லை; நம் முன்னோர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் அப்படிப்பட்ட சோதனைகளைச் செய்யவில்லை; எனினும் சிலவிஷயங்களை இக்காலத்து பௌதிக சாஸ்த்ர நிபுணர்கள் ஆராய்ந்து வெளியிட்ட முடிவுகள் நம் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட விஷயங்களுடன் ஒத்திருக்கின்றன. ஆதலால் நம் சாஸ்த்ரங்கள் உண்மையான முடிவுகளையே வெளியிடுகின்றனவென்று நாம் நம்பலாம். நமக்கு முடிவுகள்தான் முக்யம். அதுதான் அநுஷ்டானத்திற்கு வேண்டியது. ஒரு முடிவு அல்லது நிர்ணயம் எப்படி சரியானதென்று அதைப் பின்பற்றி நடக்கும் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கவேண்டுமென்ற அவச்யமில்லை. முடிவு ஸரியான முடிவாயிருக்கவேண்டியது முக்யம். இக்காலத்து பௌதிக சாஸ்த்ர நிபுணர்கள் பற்பல வஸ்துக்களின் ஸ்வபாவங்களைச் சோதித்து அறிந்து வெளியிடும் முடிவுகள்தான் நமக்குத் தெரிகிறதேயொழிய அம்முடிவு எப்படி, எந்தப் பரிசோதனை மூலம் ஏற்படுகிறதென்று நம்மால் செய்துகாட்ட முடியாது. எனினும் அம்முடிவுகளைக் கண்ட சாஸ்த்ர நிபுணர்கள் நமக்கு ஆப்தர்கள் என்றும், இல்லாததையோ, தமக்கு உண்மையல்

லாததாகத் தோன்றுவதையோ அவர்கள் வெளியிடமாட்டார்கள் என்றும் நம்பி அவர்கள் சொல்வதைப் பின்பற்றுகிறோம். இம்மாதிரியே நம் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் தர்மங்களில் பூர்ணமான நம்பிக்கை ஏற்படவேண்டும். அவைகளை நமக்குத் தந்த ரிஷிகள் அதீந்த்ரிய விஷயங்களை உள்ளபடி அறிய ஸமர்த்தர்கள்; உள்ளபடி அறிந்தவர்கள்; நம் ஹிதத்தைக் கருதியே தாம் கண்ட உண்மைகளை நமக்கு வெளியிட்டனர் என்று நம்ப வேண்டும்.

யோக சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கும் பல யோகாஸநங்களும் ப்ராணா யாமமும் தேஹத்திற்கு ஆரோக்யத்தைக் கொடுத்து புத்தி பலத்தை அபிவ்ருத்தி செய்கிறதென்பதை மேல்நாட்டு ரீதியில் வைத்ய சாஸ்த்ரம் கற்றவர்களும் அறிய ஆரம்பித்திருக்கின்றனர், நாம் சாப்பிடக்கூடாதென்று சாஸ்த்ரங்கள் நிஷேதித்திருக்கும் பல வஸ்துக்கள் சரீரத்திற்குக் கெடுதலை உண்டாக்குகின்றன வென்பதையும் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கின்றனர். இப்படியே மற்ற விஷயங்களிலும் தக்க கருவிகளுடன் ஆராய்ச்சி செய்து பார்த்தால் அவைகளின் உண்மை புலப்படும். அம்முடிவுகள் இதுவரையில் ஏற்பட்ட பல முடிவுகளைப் போலவே நம் சாஸ்த்ரங்கள் கண்ட முடிவுகளுடன் ஒத்திருக்கு மென்றே நாம் நம்புகிறோம். நமது ஆசார அநுஷ்டாநங்களில் ஒவ்வொன்றும் அப்படி ஆராய்ச்சி செய்யப்பட்டு அவை நல்லவை என்று நிரூபிக்கப்பட்ட பின்பே அவைகளை நாம் பின்பற்ற ஆரம்பிக்கலாமென்றெண்ணி அதுவரையில் அவைகளை நாம் பின்பற்றாமலிருப்பது விவேகமுள்ள கார்யமாகாது. ஏனென்றால் அவைகளைச் சிறிது காலம் கைவிட்டாலும் அதனாலேற்படும் கெடுதல்கள் தவிர்க்கமுடியாமல் போய் விடக்கூடும். காடுகள் அழிக்கப்பட்ட பிறகு, இப்போது அவைகள் அவச்யம் என்று தெரிந்த பின் அவைகளை உண்டாக்கிக் கொள்ளலாம். ஆனால் சிறந்த நமது வர்ணாச்ரமாதி வ்யவஸ்தைகளும், அவைகளின் தர்மங்களும் கைவிடப்பட்டால் பிறகு அவை சிறந்தவை என்று ஏற்படும் காலத்தில் அவைகளைப் பழைய ரீதியில் அமைப்பது அஸாத்யம். இதை நாம் நன்கு உணர வேண்டும். இவ்வளவு காலமாக அவைகளால் லோகத்திற்கு கெடுதல் ஏற்படவில்லை. அவைகள் செவ்வையாய் அநுஷ்டிக்கப்பட்டு வந்தபொழுது உலகம் க்ஷேமமாய் ஸம்ருத்தியுடனிருந்தது. அவைகளைச் சிதைக்க சிலர் இப்போது ஆரம்பிக்கும் போதே லோகத்திற்கு பற்பல இன்னல்கள் நேரத்தொடங்கியிருக்கின்றன. இக்காலத்து பௌதிக சாஸ்த்ர ஆராய்ச்சிகள் அவைகளை தவறு என்றோ, உண்மையல்ல வென்றோ நிரூபித்துவிடவுமில்லை. நன்றாக ஆராய்ந்தால் அவைகள் யதார்த்த மென்றே தெரியவரலாம். ஆகையால் நம் அரசாங்கத்தாரும் அதை முன்னின்று நடத்துபவர்களும் நமது சாஸ்த்ரங்களில் நம்பிக்கை வைத்து அவைகளில் சொல்லியிருக்கும் வர்ணாச்ரமாதி வ்யவஸ்தைகளையும் தர்மங்களையும் நன்றாகப் பாதுகாத்து லோக க்ஷேமத்தை உண்டாக்க முயற்சிக்க வேண்டும்.

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

:o:

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

“ ஸ்ரீராமாநுஜன் ”

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

..........*..........

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.
100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.
வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத் தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டிய தில்லை. மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.
தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

==o==

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்க ளருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

Regd. No. M. 4437.

'SRI KRISHNA'

A Cultural monthly devoted to religious and philosophical matters and reviewing the events of the world from a spiritual point of view.

If you look for chaste method, mould, motive and substance [illegible] OUR magazine,

[illegible] E TO SRI KRISHNA:

	Annual	Monthly
H[illegible]ts	Rs. 3.	
Colle[illegible]nts	4.	
Non-Student Adults	5.	0-8-0
Reading-rooms and Libraries	10.	1-0-0
For those who compete for prize-essays or crossword puzzles in the magazine	15.	1-8-0

To influence the influential in Asia and abroad,

ADVERTISE IN SRI KRISHNA:

	Hal[illegible]
Monthly	Rs. [illegible]
Quarterly	[illegible]
Half Yearly	[illegible]
Yearly	[illegible]

For special p[illegible]

BUSINESS MANAGER.

Special commission for those who canvass subscribers (12½%) and advertisers (10%)

Editors:

PUDUKKOTAH,
A S. RAGHAVAN.

BOMBAY,
S. NARAYAN,
1, BHAUDAJI ROAD, MATUNGA.

EVERYBODY READS IT

Apply to:—The Business Manager,
"SRI KRISHNA" EAST III, STREET, PUDUKOTTAI, [S. INDIA]

BOOK - POST.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.